பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 10 வியாழக்கிழமை (24-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:149

## உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு:

# புலிகள் விதிப்பது புதிய நிபந்தனை ஏற்க முடியாது என்கிறார் ஜனாதிபதி



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் வைத்து 'உதயன்' ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரனுக்கு பிரத்தியேக செவ்வி வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

ஜனாதிபதி அளித்த செவ்வியின் முழு விவரம் நாளைய உதயனில்!

## உதயனுக்கு பிரத்தியேக பேட்டி

கொழும்பு,ஏப்ரல்24

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத புதிய நிபந்தனைகளைப் புலிகள் இப்போது விதிக்கின்றார்கள். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.**

**- இவ்வாறு கூறுகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக 'உதயன்' பத்திரிகைக்கு நேற்று மாலை வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அந்தப் பேட்டியில் எழுப்பப்பட்ட வினா ஒன்றுக்கு பதிலளித்த சமயமே அவர் இவ்வாறு கூறினார். அதன் விவரம் வருமாறு:-

★ கேள்வி:- குடிசன நெருக்கமான பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை இடம்மாற்றி, நாட்டுக்குள் இடம்பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதன் மூலம் ஒரு காலவரையறைக்குள் வழமையான நிலையை ஏற்படுத்துவதென்று அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணங்கியுள்ளன. இந்த இணக்கத்தை அரசு நிறைவேற்றத் தவறியிருப்பதை, தற்போதைய சமாதான முயற்சிகளைத் தாம் இடைநிறுத்தியிருப்பதற்கான காரணங்களுள் முக்கியமானதாகப் புலிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தக் காரணத்தை அர்பமான ஒன்று எனக் குறிப்பிட்டு நீங்கள் ஒரேயடியாகத் தள்ளுபடி செய்துள்ளீர்கள். உங்களின் இந்தக் கருத்தை எந்த வகை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் சந்திரசேகரன் கிளிநொச்சிக்கு வருகிறார்

கிளிநொச்சி,ஏப்.24

மலையக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரன் இன்று கிளிநொச்சிக்கு வருகிறார். அவர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் இன்று பேச்சு நடத்துவார் என்று புலிகளின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதை புலிகள் இடைநிறுத்தியதையடுத்து எழுந்துள்ள நிலைமை பற்றி பேச்சு நடத்துவதற்காகவே தான் வன்னிக்குச் செல்வதாக அமைச்சர் சந்திரசேகரன் கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மாலை அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் வட்டயம் தொடர்பாக இனிவரும் காலங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் வேண்டாம்; பேச்சுத் தொடரட்டும் நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டட்டும்

### எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடிக் கருத்து

கொழும்பு,ஏப்.24

சமாதானப் பேச்சுகளில் தற்போதைக்குப் பங்குபற்றப்போவதில்லை என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்புக் குறித்து எதிர்க்கட்சிகள் கவலை வெளியிட்டுள்ளன. அந்தக் கட்சிகள் நேற்று ஊடகவியலாளர்களை வரவழைத்து தமது கவலையையும் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தின.

"யுத்தம் வேண்டாம், சமாதானப் பேச்சு தொடரட்டும்; நோர்வே அரசும தனது அனுசரணைப் பணியைத் தொடர்ந்து செய்யட்டும்" என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன. அதேவேளை, நாடாளுமன்றத்தை உடனே கூட்ட வேண்டும் என்று அரசாங்கத்தைக் எழுத்து மூலம் கேட்டுக்கொள்ளப் போவதாகவும் எதிர்க்கட்சிகள் கூறின.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. உட்பட பல எதிர்க்கட்சிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டன.

"நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம்

(13ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைப்பாடு: அமெரிக்கா மேலதிக தகவல்களை எதிர்பார்க்கிறது

கொழும்பு,ஏப்.24

சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து மேலதிக தகவல்களை எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்திருக்கிறது. சமாதானப் பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகுமென தான் எதிர்பார்ப்பதாகவும் அது கூறியுள்ளது.

வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ரிச்சாட் பௌச்சர் இவற்றைத் தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையையும் நாம் பார்த்தோம். மேலதிக தகவல்களை நாம் எதிர்பார்த்திருக்கிறோம். சமாதான நடவடிக்கைகளுக்கு நாம் தொடர்ந்து ஆதரவளிப்போம். பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பமாகும் என நம்புகின்றோம்" எனவும் அவர் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார். (ஐ)

## குடத்தனை மயானவெளியில் தலை துண்டித்த சடலம்!

கரவெட்டி,ஏப்.24

துன்னாலை குடத்தனைப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

குடத்தனை புட்டுத்தூர் மயான வெளியில் கால்நடைகளை மேய்க்கச் சென்ற சிலர் நேற்றுக் காலை இச்சடலத்தை கண்டுபிடித்தனர். கைகள் இரண்டும் பின்புறமாகக் கட்டப்பட்டு வாயினுள் சீலைத்துணி அடைந்த நிலையில் சடலம் காணப்பட்டது. உடலில் இருந்து தலை துண்டிக்கப்பட்டு வேறாகக் காணப்பட்டது.

இந்த நபர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பப்

(13ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் இன்று திருமலைக்கு விஜயம்

### அமைச்சர் ஹக்கீமுடன் பேச்சு நடத்துவார்

கொழும்பு,ஏப்.24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்கிறார். அங்கு நடைபெறும் படையினரின் வைபவமொன்றில் அவர் கலந்துகொள்கிறார்.

திருமலை விஜயத்தின் போது பிரதமர் ரணில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார். முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐதே கட்சிக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலை குறித்து இச்சந்தப்பின் போது ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமருடன் இப்பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்துவதற்காக அவர் திருமலை வரும்வரை அமைச்சர் ஹக்கீம் கடந்த பத்து நாள்களாக திருகோணமலைப் பகுதியில் தங்கியிருப்பது தெரிந்ததே. (எ)

## அஸ்கிரிய பீடாதிபதி கவலை

கொழும்பு,ஏப்.24

சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்க விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தீர்மானம் குறித்து தான் பெரும் கவலையடைந்திருப்பதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண.உடுகம ஸ்ரீபுத்தரக்பித தேரர் தெரிவித்திருக்கிறார்.

இருதரப்பினரும் தவறுகளையும், செய்யத்தவறியவற்றையும் மறந்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனவும் அவர் கோரியிருக்கிறார்.

கடந்த ஓராண்டு காலத்தில் சமாதானப் பேச்சுக்களின் பெறுபேறுகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரி நகரில் பயங்கரம்

## மினிபஸ் சங்கத் தலைவர் நேற்றிரவு வெட்டிக் கொலை!

### முகமூடி அணிந்த நபர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம்,ஏப்.24

மினிபஸ்ஸை திடீரென வீதியில் வழிமறித்த முகமூடி அணிந்த நபர்கள் அதிலிருந்த ஒருவரை அடித்தும் வெட்டியும் கொன்றனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்னிரவு இடம்பெற்ற இக்கொடூர சம்பவத்தில் சாவகச்சேரி மினிபஸ சங்கத்தின் தலைவரான மக்லன் அற்புதராஜா என்பவரே படுகொலையுண்டார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவருக்கு வயது 52.

தலை பிளந்த நிலையில் இவரது சடலம் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டது.

நேற்றிரவு 8.15 மணியளவில் தனது வானில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு சமீபமாக மற்றொரு வானில் வந்து வழிமறித்த முகமூடி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் அனுருத்தவுக்குத் தீவிர பாதுகாப்பு



கொழும்பு,ஏப்.24

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்தையின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. சமாதானப் பேச்சுகளை இடைநிறுத்துவதாக விடுதலைப் புலிகள் அறிவித்ததை அடுத்தே அவரது பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த திங்களன்று இரவு ஜனாதிபதி சந்திரிகா தேசிய வைத்தியசாலைக்குச் சென்று அனுருத்த ரத்வத்தையிடம் நலன் விசாரித்தார். அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பையும் அவதானித்தார்.

சமாதானப் பேச்சுகளை இடைநிறுத்தும் விடுதலைப் புலிகளின் கடிதம் கொழும்புக்குக் கிடைத்ததையடுத்து அனுருத்தவின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். ஜனாதிபதியின் உத்தரவினபேரில் அனுருத்தவின் பாதுகாப்பைப் பலப்படுத்த பொலீஸ்மா அதிபர் நடவடிக்கை மேற்கொண்டார்.

இதற்கிடையே, ஜனாதிபதியின் பாதுகாப்பையும், பலப்படுத்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதன்படி எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதி பங்குபற்றும் நிகழ்ச்சிகளின பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் மறுமதிப்பீடு செய்யப்படும். (எ)

# மட்டக்களப்பு நகரப் பாதுகாப்பு அதிகரிப்பு; சோதனைச்சாவடிகளில் பொலீஸ், இராணுவம்

மட்டக்களப்பு,ஏப்.24

மட்டக்களப்பு நகருக்கான நுழைவாயில்கள் பகுதிகளில் நேற்று முதல் படையினரின் பாதுகாப்பு அதிகரிகப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த சோதனைச்சாவடிகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களில் இப்பிரதேசத்தில் இராணுவப புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்பே பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலீஸ் நிலையப் பாதுகாப்பதிகாரி தெரிவித்தார். இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதால் மீணடும் கெடுபிடிகள் அதிகரித்துவிடுமோ என பொதுமக்கள் அச்சம் கொணடுள்ளனர்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ)

## கம்பர்மலை மாணவனுக்கு '10 ஏ' சித்தி

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் வடமராட்சியின் கம்பர்மலை த.க.பாடசாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் கலாசியாபியோ மதுசூதனன் என்ற மாணவன் பத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச்சித்தி பெற்றுள்ளதாக அப்பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் இல்ல சிறுமிகள் 22பேரும் நன்னடத்தை அதிகாரிகளிடம்!

யாழ்ப்பாணம்,ஏப்.24

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இருந்து கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு பொலீஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றின் உத்தரவின் பேரில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 22சிறுமிகளும் நேற்று சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானின் பணிப்பின்பேரில் போதனா வைத்தியசாலையில் இருந்து நேற்று மலை 4.45 மணியளவில் சாவகச்சேரி பொலீஸார் இவர்களைக் கையேற்று நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை 9.30 மணியளவில் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் சிறுவர்நன்னடத்தை அதிகாரிகளான திருமதி எஸ்.சிவராஜா, எஸ்.சிவகரன், சாவகச்சேரி பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதனையடுத்தே சிறுமிகள் அனைவரும் நன்னடத்தை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். முன்னதாக கடந்த 17ஆம் திகதி நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது இந்த சிறுமிகளை உடுவில் வாழ்வகத்தில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். ஆனால், இவர்கள் அனைவரையும் உடனடியாகப் பொறுப்பேற்று பராமரிக்கக்கூடிய வசதி, வாய்ப்புகள் இல்லை என்று வாழ்வக நிர்வாகம் நீதிமன்றுக்கு அறிவித்திருந்தது. அதனையடுத்தே தற்பொழுது இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-10-5-15)

# திருமலைப் பகுதியில் இரு குழுக்களின் தகராறின்போது கைக்குண்டு வீச்சு!

## ஐவர் காயம்; அரசியல்வாதி வீட்டின் மீதும் தாக்குதல்

கந்தளாய்,ஏப்.24

திருகோணமலை 4,000 ஏக்கர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட தகராறின்போது கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டதாக திருகோணமலை பொலீஸார் தெரிவித்தனர்.

இக்கைக்குண்டு வீச்சில் ஒரு பெண், ஓர் இராணுவ வீரர் உட்பட ஐவர் காயங்களுக்குள்ளாகி திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழுவின் மீது கைக்குண்டு தாக்குதல் மேற்கொண்டவர் இராணுவ வீரரின சகோதரர் என்பது பொலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை, 2000ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரஜைகள் முன்னணிக் கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளராகப் போட்டியிட்ட ஒருவரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு எறிந்தனர் என்று திருகோணமலை பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவ வேளையில் பிரஜைகள் முன்னணி உறுப்பினர் வேலுப்பிள்ளை விஸ்வநாதன் வீட்டிலிருந்த போதிலும், பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. வீட்டிற்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளதெனவும் பொலீஸார் தெரிவித்தனர். இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. (எ)

# களுத்துறைச் சிறைக் கைதி ஒருவர் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்

யாழ்ப்பாணம்,ஏப்.24

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதி ஒருவர் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

தவறான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் போலியான தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியவற்றை வைத்திருந்தமை, அவற்றைப் பயன்படுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் மார்க்கண்டு சுதன் (சிவகுல வீதி, உரும்பிராய்) என்பவரையே பொலீஸார் நேற்று யாழ்நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர். இவரிடமிருந்து விசேட விளக்கம் கோரப்படவுள்ளதால் அவரை எதிர்வரும் மேமாதம் 26ஆம் திகதி மீண்டும் மன்றில் முன்னிலைப்படுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இவர் கடந்த 2000ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு களுத்துறைச சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் இரண்டு தடவைகள் தப்பியோடியிருந்தார். பின்னர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு தற்போது 4வருட கடுழியச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார்.

போலியான பிறப்புப்பத்திரம் மற்றும் அடையாள அட்டைகள் வைத்திருந்தமை தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் நடைபெற்ற போது விசேடவிமான மூலம் இவர் யாழ்ப்பாணம் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டார். விசாரணை முடிந்த பின்னர் உடனடியாகக் கொழும்பு கொண்டு செல்லப்பட்டார். (ஒ-8)

## 'வேர்கள் துளிர்க்கும்' சிறுகதைத் தொகுதி வெளியீடு

வவுனியா,ஏப்.24

கப்டன் வானதி வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்ட 'வேர்கள் துளிர்க்கும்' சிறுகதைத் தொகுதி நூலின் அறிமுகவிழா நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியினை வவுனியா மாவட்டத் தளபதி எழிலரசி ஏற்றி வைத்தார். வவுனியா பெண்கள மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் பிருந்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரையினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் நிகழ்த்தினார்.

வவுனியா பள்ளிவாசல் செயலாளர் தாஸீஸ் முதற்பிரதியைத் பெற்றுக் கொண்டார். நூல் மதிப்பீட்டுரையை பாடசாலை அதிபர் திருமதி மாணிக்கவாசகர், பத்திரிகையாளர் கனகரவி ஆகியோர் நிகழ்த்தினர்.

பதிலுரையினை வானதி வெளியீட்டகப் பொறுப்பாளர் உலகமங்கை நிகழ்த்தினார். (ஐ-4)

## மூதூருக்கு படகுகளில் நிவாரணப் பொருள்கள்

மூதூரில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு 'யுனிசெவ்' மற்றும் தனியார் வியாபாரிகள் அனுப்பிவைத்த பொருள்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேரடியாக திருமலைத் துறைமுகத்துக்குச் சென்று பார்வையிட்டார். அப்பொருள்களை அவர் விசேட படகுகளில் மூதூருக்கு அனுப்பி வைத்தார்.

'யுனிசெவ்', மூதூர் மக்களுக்கு அரிக்கன் விளக்குகள் மற்றும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கான சீருடைத்துணிகள் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளது. கொழும்பு வியாபாரிகள் ஏராளமான உடுதுணிகள், துவாய்கள் மற்றும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள், பால்மா வகைகள் ஆகியவற்றை அனுப்பிவைத்துள்ளனர்.

மூதூரில் நேற்று எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை எனவும் அமைதி நிலவுவதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்) (எ)

# விளையாட்டுத் துறையின் சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.24

ஆனையிறவுச் சமரின் மூன்றாம் ஆண்டு வெற்றிவிழா மற்றும் 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா ஆகியவற்றையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பெயர்களை தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகம் அல்லது வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைச் செயலகம் அல்லது பொற்பதி வீதி கொக்குவிலில் உள்ள யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விவரங்களை அந்தந்த மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களுடன் அல்லது 021 - 2225715 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

# தடங்கல்களை நீக்கி இருதரப்பும் சமாதான முயற்சியைத் தொடரவேண்டும்

## இந்திய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் கூறுகிறார்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய தடங்கல்களை நீக்கி இருதரப்பும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென இந்தியா கூறுகிறது.

சமாதான பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் விடுதலைப் புலிகளின் தீர்மானம் குறித்து புதுடில்லியில் வினவப்பட்டபொழுது இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் நவ்ஜித் காரநாத் இந்த நம்பிக்கையைத், தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் 20 ஆண்டுகள் நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தும் செயல் மிகவும் சிக்கலானது. அதனால் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கையில் இதுபோன்று தடங்கல்கள் ஏற்படமுடியும் எனவும் - அவர் கூறினார்.

ஏற்படக்கூடிய தடங்கல்களை நீக்கி, சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செயற்பட வேண்டும் எனவும் - அவர் கூறியிருக்கிறார். (எ)

# இனவாதிகளின் கூச்சல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த புலிகள்

## சமாதானப் பேரவைத் தலைவர் ஜெகான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.24

நாடு முழுவதும் விடுதலைப் புலிகளுக்கு தாரைவார்க்கப்பட்டுவிட்டதாகக் கூச்சலிட்டுக்கொண்டிருந்த இனவாதிகளின் கூற்றுக்கு விடுதலைப் புலிகள் முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றனர்.

- இவ்வாறு, தெரிவித்திருக்கிறார் தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா.

விடுதலைப் புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்தியிருப்பது தொடர்பாக கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளின்போது விடுதலைப் புலிகள் அரசினால் ஓரங்கட்டப்பட்டமையே அவர்கள் இவ்வாறான முடிவுக்கு வருவதற்கு காரணமாயிற்று.

தெற்கிலுள்ள மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

பேச்சு மேசைக்கு மீண்டும் புலிகளைக் கொண்டுவருவது அரசின் கடமையும் பொறுப்புமாகும். (ஐ-4)

## புலிகள் - முஸ்லிம்கள் இடையிலான

# வவுணதீவுச் சந்திப்பு திட்டமிட்டபடி நடக்கும்!

மட்டக்களப்பு,ஏப்.24

விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பு மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவில் இம்மாதம் 27ஆம் திகதி திட்டமிட்டபடி நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தியிருக்கின்றபோதிலும், முஸ்லிம் பிரதிநிதிகளுடனான தமது சந்திப்பு தொடரும் என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரின் தலைமையிலும் -

முஸ்லிம் பிரதிநிதிகள், வீடமைப்பு பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமையிலும் பங்குபற்றவிருக்கின்றனர். (ஐ-4)

# கடற்புலிகள் - கடற்படையினர் இன்றைய சந்திப்பு ஒத்திவைப்பு

விடுதலைப் புலிகளின் கடல் போக்குவரத்து தொடர்பாக ஆராய்வதற்காக கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில இன்று ஓமந்தையில் நடைபெறவிருந்த சந்திப்பு எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அறிவித்துள்ளார். கண்காணிப்புக் குழுவினரால் வழங்கப்பட்ட கடல்வலய முன்வரைபு தொடர்பாக ஆராய்வதற்கு காலஅவகாசம் தேவை என்று இரு தரப்பினரும் கேட்டுக்கொண்டதாலேயே இந்தச் சந்திப்பு எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-4)

# நெல்லியடிப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

## இன்றும் நாளையும் ஏற்றப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.24

நெல்லியடி பொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு இன்றும் நாளையும் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது

தடுப்பூசி ஏற்றப்படும் தினம், நேரம், இடம் குறித்த விவரங்கள் வருமாறு:-

இன்று வியாழக்கிழமை -

- முற்பகல் 9 மணிமுதல் 12 மணி வரை கரவெட்டி கிளவிதோட்டம் சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் 1மணிமுதல் 3 மணிவரை கரவெட்டி மத்தி தஞ்சை ஐங்கரா சனசமூக நிலையத்திலும் - தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை -

முற்பகல் 9 மணிமுதல் 12 மணி வரை கட்டைவேலி நாமகள் சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் 1 மணிமுதல் 3 மணி வரை கரவெட்டி சிந்தாமணி சனசமூக நிலையத்திலும் - தடுப்பூசி ஏற்றப்படும்.

# 'சார்ஸ்' நோய் அச்சம் காரணமாக பீஜிங் பாடசாலைகள் மூடப்பட்டன



பீஜிங்,ஏப்.24

'சார்ஸ்' நோய்த் தாக்கம் காரணமாக சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் இன்று முதல் அடுத்த இரு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிவுறுத்தல்களை அதிகாரிகள் நேற்று வழங்கினர்.

ஏற்கனவே 'சார்ஸ்' நோய் காரணமாக பீஜிங்கில் 28 பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில், இறந்தவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது. மேலும் நூற்றுக்கணக்கானவர்களுக்கும் இந்த நோய்த் தொற்றுக் காணப்படுகின்றது.

இந்த நோய்க்கான வைரஸ் மிக வேகமாகவும் இலகுவாகவும் பரவி வருவதாக 'பீஜிங் ஜினோமிக்ஸ் இன்ஸ்ரியூட்' என்ற நிறுவனம் எச்சரிக்கை செய்ததைத் தொடர்ந்து பாடசாலைகளை மூடுவது என்று பீஜிங் அதிகாரிகள் முடிவுசெய்தனர்.

பீஜிங்கில் உள்ள 17 லட்சம் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சீன அரசியல் தலைவர்கள் கூறுகின்றனர்.

உலகம் முழுவதும் இந்த நோய் காரணமாக சுமார் 200 பேர் வரையில் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சீனா, ஹொங்ஹொங், கனடா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் -

'சார்ஸ்' நோய் வைரஸை குணப்படுத்தும் எதிர்ப்பு சக்தி பப்பாளிப் பழத்தில் இருக்கிறது என்று ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். 'சார்ஸ்' நோயாளிகளுக்கு பப்பாளிப் பழத்தைக் கொடுக்கும்படியும் அவர்கள் சிபாரிசு செய்துள்ளனர். (ம)

# இரசாயன ஆயுதங்களை ஒழிக்க நான்கு நாடுகளுக்கு காலக்கெடு

## அமெரிக்காவும் அதில் அடங்கும்

ஹேக்,ஏப்.24

அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா உட்பட 4 நாடுகளிடம் உள்ள இரசாயன ஆயுதங்களில் ஒரு தொகுதியை அழிப்பதற்கான முதற்கட்டக் காலக்கெடு எதிர்வரும் 29ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

உலகில் இருந்து இரசாயன ஆயுதங்களை ஒழிப்பது தொடர்பான ஒப்பந்தம் 1993ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதில் 151 நாடுகள் அப்போது கையெழுத்திட்டன.

2007ஆம் ஆண்டுக்குள் இரசாயன ஆயுதங்கள் அனைத்தையும் உலகில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

எனினும், எதிர்வரும் 29ஆம் திகதிக்குள் இந்த 4 நாடுகளும் வைத்திருக்கும் இரசாயன ஆயுதங்களில் ஒரு தொகுதியை அழிக்க இந்த நாடுகள் ஒப்புக்கொண்டிருந்தன. அந்தக் காலக்கெடு நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

ஒப்பந்தம் கைச்சாத்தான போது ரஷ்யாவிடம்தான் அதிகளவான 40ஆயிரம் தொன் இரசாயன ஆயுதங்கள் இருந்தன. இது படிப்படியாக தற்போது குறைக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவிடம் 20ஆயிரம் தொன் இரசாயன ஆயுதங்கள் அப்போது இருந்தன. இவற்றில் ஒரு தொகுதியை முதலாவது காலக்கெடு முடிவதற்குள் இந்த நாடுகள் அழித்துவிடவேண்டும்.

இந்தியாவும், தன்னிடம் இருந்த இரசாயன ஆயுதங்களைக் குறைத்து வருகின்றது. இந்தப் பட்டியலில் வேறு ஒரு நாடும் உள்ளது. அதன் பெயர் வெளியிடப்படுவதை அந்த நாடு விரும்பவில்லை.

இரசாயன ஆயுதங்கள் தடுப்பு நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் ரோகாபயோ பிர்தர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். (ம)

## ஈராக் போரின் எதிரொலி

# பிரான்ஸ் உடனான உறவுகளை மீள்பரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்கா திடீர் அறிவிப்பு

வாஷிங்ரன்,ஏப்.24

ஈராக் போருக்கு ஆதரவு அளிக்காததன் எதிரொலியாக அமெரிக்காவுக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. பிரான்ஸுடனான உறவுகளை மீள்பரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இந்தக் கருத்தை வெளியிட்டார். அமெரிக்க உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக அரசு இந்த முடிவை எடுக்கவேண்டி வந்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கான அனுமதியை ஐ.நா விடம் இருந்து பெற அமெரிக்கா முயன்ற சமயத்தில் அதற்கு பிரான்ஸ் ஆதரவு அளிக்கவில்லை. அவ்வாறு ஒரு பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் ஐநா. பாதுகாப்புச் சபையில் தன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவேன் என்றும் பிரான்ஸ் மிரட்டியது.

பிரான்ஸ் அவ்வாறு நடந்து கொண்டதற்கான விளைவுகளை அது அனுபவிக்கவேண்டிவரும் என்று கொலின் பவல் தனது பேட்டியின் போது கூறினார்.

ஈராக் விடயத்தில் கடும் எதிர்ப் போக்கைக் கடைப்பிடித்து வந்த பிரான்ஸ், ஐ.நா. ஈராக் மீது விதித்த பொருளாதாரத் தடைகளை உடனடியாக விலக்க வேண்டும் என்ற விடயத்தில் மட்டும் அமெரிக்காவுடன் இணக்கப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. ஈராக் மீதான தடையை உடன் நீக்க வேண்டும் என்று கடந்த திங்கள் ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூதர் வலியுறுத்தி இருந்தார். இது ஓர் ஆச்சரியமான நகர்வு என்று அப்போது அனைவராலும் வியக்கப்பட்டது.

உடனடியாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிகாரிகளும் பிரான்ஸின் இந்த முடிவை வரவேற்றனர். ஆனால், இந்த அறிவிப்புக்குப் பின்னரே பிரான்ஸுடனான உறவுகளை மீள்பரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்கா இப்போது கூறுகின்றது.

கடந்த திங்களன்று வாஷிங்ரனில் நடந்த உயர் அதிகாரிகள் கூட்டத்தில் பிரான்ஸுக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

பிரான்ஸுடன் இனிமேல் எப்படிப்பட்ட உறவுகளைப் பேணுவது என்பது தொடர்பான விடயங்களை அமெரிக்கர்கள் இப்போது தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த விடயத்தில் நேட்டோவைப் பயன்படுத்தாமல் மாற்று வழிவகைகள் எதையாவது தான் அமெரிக்கர்கள் பயன்படுத்துவார்கள் என்றும் அவர் சொன்னார். (ம)

உலக அரங்கில்

## புனிதப் பயணம் ஆரம்பம்

பக்தாத்,ஏப்.24

ஈராக்கில் கடந்த 30 வருடங்களாகத் தடைப்பட்டிருந்த ஷியா முஸ்லிம்களின் புனிதப் பயணம் இப்போது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

முஸ்லிம்களின் புனித நகரமான கர்பலாவுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கால்நடையாகவும் வாகனங்களிலும் ஷியா இன முஸ்லிம் மக்கள் பெரும் எண்ணிக்கையில் சென்று வருகின்றனர்.

தமது உடல்களில் இரத்தம் வழியத் தக்கதாக அடித்துக் கொண்டும் தொழுகை நடத்திக் கொண்டும் அவர்கள் இந்தப் புனிதப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். (ம)



# நைஜீரிய அதிபராக ஒபசான்ஜோ தெரிவு

## எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம்

அபுஜா,ஏப்.24

நைஜீரியாவின் அதிபராக தற்போதைய தலைவர் ஒபசான்ஜோ தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. கடந்த 20வருடங்களின் பின்னர் நடந்த பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் அவர் தெரிவாகியுள்ளார்.



60 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஒபசான்ஜோ வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

ஆனால், நைஜீரிய எதிர்க்கட்சிகள் இந்த முடிவை ஏற்க மறுத்துள்ளன. தேர்தல் நடத்தப்பட்ட முறையையும் அவர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். ஜனநாயக முறையிலான தேர்தலையும் இது கேள்விக்குறியாக்கி உள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த 20ஆண்டுகளாக நைஜீரியாவில இராணுவ ஆட்சி நடத்தி வந்த ஒபசான்ஜோ, பல்வேறு அழுத்தங்களின் பின்னர் நாட்டில் தேர்தல் ஒன்றை நடத்த இணங்கினார்.

ஆனால், நடந்து முடிந்துள்ள தேர்தல் நேர்மையாக இடம்பெற்றதா என்பது குறித்து எதிர்க்கட்சிகள் கடும் சந்தேகம் எழுப்பியுள்ளன.

அதன் உச்சக் கட்டமாக "இது தேர்தலே அல்ல" என்று அனைத்து நைஜீரிய மக்கள் கட்சி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் வேட்பாளரான முஹம்மது புஹாரியே ஒபசான்ஜோவுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஆரம்பத்தில் வாக்கு எண்ணிக்கையில் முஹம்மதுவுக்குப் பின்னால் இருந்த ஒபசான்ஜோ ஒரு கட்டத்தில் அவரைத் தாண்டிப் பாய்ந்து முன்னணிக்குச் சென்றார். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அனைத்து நைஜீரிய மக்கள் கட்சி, தேர்தல் அதிகாரிகள் அரசுடன் சேர்ந்து மோசடி செய்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டினர்.

கட்சியின் பேச்சாளர் இப்ராஹிம் மொடிபோ தெரிவிக்கையில் "எமக்கு உண்மையான ஜனநாயகக் கலாசாரம் தேவை. பொய்களின் மேலும் ஏமாற்றுக்களாலும் கட்டியெழுப்பப்படும் ஜனநாயகம் எங்களுக்கு தேவையில்லை.' எந்த ஒரு வீடும் நிலையற்ற அத்திவாரத்தில் கட்டப்பட்டால் அது விரைவில் அழிந்துவிடும்"- என்றார்.

அதேசமயம் -

ஒபசான்ஜோவின் பேச்சாளர் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புகளை, குற்றச்சாட்டுக்களை எல்லாம் நிராகரித்தார். அவர்கள் தேர்தலில் தோல்வி அடைந்தமையாலேயே தேர்தல் முடிவுகளை நிராகரிக்கின்றார்கள் என்று சொன்னார். "இத்தகையவர்கள் தமது நாட்டை பின்னோக்கி இழுக்கப் பார்க்கிறார்கள்" என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் -

தேர்தலைக் கண்காணித்த வெளிநாட்டு அமைப்புக்களும் அதனைக் குறை கூறியுள்ளன. இந்தத் தேர்தல் "ஒழுங்கற்ற முறையில் நடந்ததுடன் அது ஓர் ஏமாற்று வித்தை"- என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

அதிபர் தேர்தலுடன் இணைத்து நடத்தப்பட்ட 36மாநில ஆளுநர்களுக்கான தேர்தல் 27இடங்களை ஒபசான்ஜோவின் மக்கள் ஜனநாயகக் கட்சி வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## அணு உலை விவரங்கள் பற்றிய

# வடகொரிய - அமெரிக்க பேச்சுக்கள் ஆரம்பம்



பீஜிங்,ஏப்.24

வடகொரியா தனது அணு உலைகளை மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்துள்ளது குறித்த சர்ச்சைக்குரிய விடயம் பற்றி அந்த நாடும் அமெரிக்காவும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன.

சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்று புதன்கிழமை இந்தப் பேச்சு ஆரம்பமானது. சீனாவும் இதில் கலந்துகொண்டுள்ளது.

கடந்த ஒக்ரோபரில் ஐ.நா. தடைகளையும் மீறி தன் அணு உலைகளை மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்தது வடகொரியா. அப்போது முதல் கொரியக் குடாப் பகுதியில் பதற்றநிலை தொடர்கின்றது.

மின்சார உற்பத்திக்காகவே அணு உலைகளை மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்ததாக வடகொரியா கூறியது. ஆனால், அந்த அணு உலைகள் மூலம் அணுவாயுதங்களை வடகொரியாவால் உற்பத்திசெய்ய முடியும் என்று அமெரிக்கா தெரிவிக்கின்றது.

இந்த விடயம் குறித்து வடகொரியாவுடன் பேச்சு நடத்த மறுத்து வந்த அமெரிக்கா, நீண்ட இராஜிய நடவடிக்கைகளின் பின்னர் இப்போது நேரடிப் பேச்சுக்களை நடத்த இணங்கியுள்ளது.

மூன்று நாள்களுக்கு இந்தப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. கிழக்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்கத் துணை அமைச்சர் ஜேம்ஸ் கீலியும் அமெரிக்க விவகாரங்களுக்கான துணைப் பணிப்பாளர் லீ ஜுன் ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் முக்கியமாகப் பங்குகொண்டுள்ளனர். (ம)

நான் அரசியல்வாதியாக இருந்தாலும்கூட

# எனது அரசியல் பலத்தை அதிகரிக்க தமிழர்களைப் பயன்படுத்தமாட்டேன்!

## யாழ்.வந்த அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.24

நான் அரசியல்வாதிதான். ஆனால், எனது அரசியற் பலத்தை அதிகரிக்க வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களைப் பயன்படுத்த மாட்டேன்.

- இவ்வாறு தெரிவித்தார் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.செயலகத் திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நான் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த வேளை யுத்தத்தால் அல்லற்பட்ட வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளைச் செய்துள்ளேன்.

ஆனால், அரசில் அங்கம் பெற்று அமைச்சராக வந்ததன் பின் என்னால் சுதந்திரமாகச் செயற்பட முடியாதுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்புக்குரிய அமைச்சராக இருந்தாலும் அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும், அதன் கொள்கைப்படியும்தான் செயற்படமுடியும். அதனை மீறிச் செயற்படுவதற்கு சட்டம் இடமளிக்கவில்லை.

நான் புனர்வாழ்வு அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், தமிழ் மக்களுக்கு வேண்டிய உதவிகள் எதனையும் செய்யவில்லை எனச் சிலர் கூறி வருகின்றனர்.

ஆனால், எனது முயற்சியால் வன்னியிலுள்ள சுமார் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு மேலதிகமாக நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அது மட்டுமல்லாது மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்த 65 ஆயிரம் ரூபாவை ஒரு லட்சமாக அதிகரித்து வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டேன்.



உலக உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள் எனது அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளதால் அதன்மூலம் சுமார் 22 கோடி ரூபா பெறுமதியான உதவிகளை வடபகுதி மக்களுக்கு வழங்க முடியும்.

கடந்த மாதம்கூட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் போஷாக்கு உணவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்தேன்.

எமது அமைச்சு அமைச்சரவை அந்தஸ்து இல்லாதது. இதனால் இந்த அமைச்சின் மூலம் மக்களுக்கு வேண்டிய தேவைகளைத் திருப்திகரமாக நிறைவேற்ற முடியாதுள்ளது.

அதுமட்டுமல்லாது, கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கு, சங்கங்களின் புனரமைப்புக்கும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் மூலம் இலகு கடன் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயங்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு செயற்படுத்தப்படும்.

வடக்கு-கிழக்கிலுள்ள எல்லாப் புனரமைப்புப் பணிகளையும் இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்ள முடியாது. இதனால் எமது அரசில் அங்கம் வகிக்கும் எல்லா அமைச்சுக்களையும் ஒன்றிணைத்து இப்பகுதியின் அபிவிருத்திக்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதேவேளை - வடபகுதி மக்களுக்குச் செய்யவேண்டிய சேவைகளிலிருந்து நான் நழுவிவிட விரும்பவில்லை.

சாவகச்சேரி நவீன சந்தைப் புனரமைப்பில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதிமோசடியில் என்னையும் சம்பந்தப்படுத்தி தென்பகுதிப் பத்திரிகைகள் பல பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன. அதிலும் ஓர் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியருக்கு எதிராக மானநஷ்ட வழக்குத் தொடர்வதற்குப் பிரதமரிடம் அனுமதி கோரியுள்ளேன். அது கிடைத்ததும் வழக்குத் தொடரவுள்ளேன்.

தென்னிலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லைக்கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கியது போல வடபகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களும் கொள்வனவு செய்வதற்கான அனுமதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கிலுள்ள 96 கிராமிய வங்கிகளுக்கு நிதியுதவி செய்ய திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதேபோல அரிசி ஆலைகள் மற்றும் ஐஸ் உற்பத்தி நிலையங்கள என்பன 'நிகொட்' மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நிவாரணக் கொடுப்பனவுக்குரிய அரிசியை கூட்டுறவுச் சங்கங்கள அரச அதிபர்கள் மூலம் கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உங்களுக்குள்ள எத்தகைய பிரச்சினைகளாக இருந்தாலும் எனக்குத் தெரியுங்கள். எனது அமைச்சால் செய்யக்கூடியவற்றை செய்கிறேன். அமைச்சர் பதவியில் இருந்து விலகிச் செல்லும்போது எத்தகைய பழிச்சொல்லுக்கும் இடமளியாது உடனடியாக விலகிச் செல்வதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றேன்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற சமாதான சூழ்நிலை குழம்பக்கூடும் என்று பலரும் எண்ணுகின்றனர். இந்தப் பேச்சு எத்தகைய தடங்கல் வந்தாலும் தொடர்ந்தும் இடம்பெறும். அது தொடரும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

- என்றார் அமைச்சர் ஜயலத்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு அமைச்சின் செயலாளர் ரி.ஜெயரட்ணம், வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் சுப்பிரமணிய சர்மா, யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.கனகசபாபதி, தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், புனர்வாழ்வு அமைச்சின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-5-8)

## ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

தென்மராட்சி,ஏப்.24

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு 30லட்சம் ரூபா பெறுமதியான புதிய அம்புலன்ஸ் வாகனம் வழங்கப்படவுள்ளது.

'நிக்கொட்' திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனமே சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை சாவகச்சேரி வைத்தியசாலையின் பாவனையில் இருந்த அம்புலன்ஸ் வாகனம் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## அறிவித்தல்

மாதகல் கனால் வீதியில் வதியும்

**தனபாலசிங்கம் சிவசோதி**

ஆகிய நான் பகிரங்கப்படுத்துவது யாதெனில் எனது தாய் வழிச் சொத்தான வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலி.மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று இறை


"கியாவத்தை" நிலப்பரப்பு (2) இரண்டு

எல்லை கிழக்கு: முருகேசு கைம்பெண் சீதேவிக்கும்
வடக்கு : வேலுப்பிள்ளை கைம்பெண் வள்ளிப்பிள்ளை
மேற்கும்-தெற்கும் சின்னத்தம்பி முருகருக்கும் *உரிய ஆதனம்.*

இவ்வாதனம் எனது தாய்வழிச் சொத்து. இவ்வாதனம் பிறிதொருவருக்கும் நிந்தப்படவில்லை என்றும் இதில் யாதொருவருக்கும் பங்கு சாட்டுதல் இல்லையென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

*குறிப்பு:* சகல ஆவணங்களும் என்னிடம் உண்டு.

இப்படிக்கு
(17128) தனபாலசிங்கம் - சிவசோதி




முதன் முறையாக
License No : 50445
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
BS No : 3412:1996
License No : KM47240
Access Graphics
WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி). 324261-5. 337283-5
பெக்ஸ்: 446554
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர். 95/1. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

## சாயி சிந்தனை



### மனமே மூலகாரணம்

எண்ணங்கள் இல்லாமல் மனிதன் வாழ இயலாது. ஆனால் இந்த எண்ணங்கள் சிற்சில அளவுகளில் கட்டுப்பட வேண்டும். மிதமிஞ்சிய எண்ணங்கள் உன்னைப் பித்தனாக்குகின்றன. உனது செயல்கள் எவ்வாறு இருக்கின்றனவோ அதற்குத் தகுந்தாற் போல் நீ மாறுகின்றாய். ஆகவே, அனைத்து வியாதிகளுக்கும் மனத் துன்பத்திற்கும் அமைதியின்மைக்கும் உனது எண்ணங்களே மூலகாரணம். சுகத்தையும் மகிழ்ச்சியையும் பெறவிரும்பினால் உனது எண்ணங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

எண்ணங்கள் வயதுப் பருவத்தால் ஏற்படுபவையல்ல. எண்ணங்கள் பால்யம்,யௌவனம் குமரப்பருவம், வயோதிபம் போன்ற பருவ நிலைகளைக் கடந்தவை. மனம் ஆண், பெண் என்ற பாகுபாட்டைக் கடந்தது. மரணமடைவது உடலே தவிர மனம் அல்ல. உடல் இறக்கும் பொழுது மனம் தான் இறப்பதாக நினைக்கிறது. மனதுக்கு மரணம் இல்லை. மயக்கம் காரணமாக நாம் மனிதத் தன்மையைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

நாம் தளைப்படுவதற்கும் விடுதலையடையவும் மனமே காரணம். எனவே, நல்லெண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். நற்செயல்களை அதிகம் செய்ய வேண்டும். நல்ல விதங்களில் சிந்தித்துப் பழகவேண்டும். இவையே மனிதன் பரிபூரணம் அடைய உதவி புரிகின்றன. நீண்ட ஆயுள் வாழ வேண்டுமென்று விரும்பினால் எப்போதும் மகிழ்ச்சிகரமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனந்த மயமாக மாற வேண்டுமென்றால் அந்தக் 'கரணம்' முழுவதும் அன்பால் நிரம்ப வேண்டும். நல்லெண்ணங்கள் அன்பிலிருந்து வெளிவருகின்றன. மனிதனுள் நல்லெண்ணங்களை வளர்த்துக்கொள். இறைவனைப் பற்றி நினைக்க மனதைப் பழக்கிக்கொள். மனதுக்கு அடிமையானவன் எதையும் சாதிக்க முடியாது. எண்ணம் தொடங்கியவுடன் அதைக் கவனித்து சரியா? தவறா? என்பதை விவேகத்தால் கூர்ந்துணர்ந்து செயற்படு.

(ஆதாரம்: சனாதனசாரதி)

## கண்ணீர் அஞ்சலி

**நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், நயினாதீவு மக்களுக்காக படகு, மினிபஸ், பஸ் சேவைகளை நடத்தியவருமான**

### இ.செல்லையா

**அவர்களின் மறைவுக்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

**சோ.சின்னத்துரை குடும்பம்.**
நயினாதீவு - 01 (17133)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 07 - 06 - 1922



உதிர்வு 25 - 03 - 2003

### அமரர் சின்னட்டி கணபதி

**தந்தையே, பாசத்தின் பிறப்பிடமே!**
**எந்தையே, எங்கள் இதயத்தின் தெய்வமே!**
**எமது குடும்பத்தின் ஒளிச்சுடரே!**
**எம்மை வாட்டுதையா உங்கள் நினைவலைகள்.**

**எமது குடும்பத் தலைவர் 25.03.2003 அன்று சிவபதமடைந்த வேளையில் ஆறுதல செய்தி அனுப்பியும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (24.04.2003) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்.**

**மனைவி, பிள்ளைகள்,**
*கூடத்து அம்மன் கோவிலடி,* **மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
*பிரதான வீதி,சங்கானை.* (17055) **பூட்டப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை

நயினாதீவைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை அவர்கள் 23-04-2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் தருமலிங்கம் (V.M.R. கொழும்பு - 13), புவனேஸ்வரி, தனபாலசிங்கம் (கனடா), பரராசசிங்கம் (V.M.R.கொழும்பு - 13), மகேஸ்வரி, சகாதேவன் (அரசினர் வைத்தியசாலை, நயினாதீவு), காசிலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் அன்னலெட்சுமி (ஆசிரியை,விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு), வை. சபாரெத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்), பரமேஸ்வரி (கனடா), தனலெட்சுமி, விஸ்வநாதன் (விவசாய இலாகா, வேலணை), கோமதி, செல்வகுமாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லையா இராசையா, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-04-2003) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4.00 மணியளவில் பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
4ஆம் வட்டாரம், நயினாதீவு. (17130) க.சகாதேவன் (மகன்).

## உதயன்

# நெகிழ்ச்சிப் போக்கு முடிந்து நெருக்குதல் காலம் பிறந்தது

"கடந்த ஒரு வருட காலமாக சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வந்த நெகிழ்ச்சிப் போக்கு முடிவுக்கு வந்துள்ளது. தேன்நிலவு காலம் முடிவடைந்துவிட்டது. இனிவரும் காலங்களில் அரசியல் சூழ்நிலை தீவிரமடையப்போகின்றது. நெருக்கடி நிலையும் தீவிரமான சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளன."

- இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன்.

தீவிரமடைந்துவரும் அரசியல் சூழ்நிலைகள் குறித்து யாழ். மக்களுக்கு தெரியப்படுத்தி, அவர்களை தெளிவுபடுத்தி, அவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தம்மை வேண்டியிருப்பதாக யாழ்ப்பாணத்தில் அவர் பத்திரிகையாளர்களிடம் தகவல் வெளியிட்டார்.

தலைமைப்பீடத்தின் பணிப்பைச் செயற்படுத்தும் நோக்கில் குடாநாட்டில் பலதரப்பினரையும் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றங்களை அவர் மேற்கொண்டு வருகின்றார். அவர் தலைமையிலான ஒரு குழுவினர் இந்தப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து மக்களுக்கு விளக்கும் முக்கிய பொறுப்பை - விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையின் முடிவுக்கு அமைய - செயற்படுத்த வந்திருப்பதாலும், புலிகளின் மூத்த பிரமுகர்களின் வரிசையில் முக்கியமானவர் என்பதாலும் இந்தக் கட்டத்தில் பிரமுகர் பாலகுமாரன் முன்வைக்கும் கருத்துகளும் மிகவும் முக்கியமானவையாக அமைகின்றன.

அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையின் இறுக்கத்தை தெளிவுபடுத்தியுள்ள அவர், அதற்காகப் போர்மூண்டுவிடும் என எவரும் அஞ்ச வேண்டாம் என்றும் குறிப்பிட்டு மக்களின் மனதில் ஆறுதலை ஏற்படுத்தத் தவறவில்லை.

கடந்த ஒருவருடகால சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட பல்வேறு அம்சங்களை நிறைவேற்ற - செயற்படுத்த - அரசு தவறியிருப்பதைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஏற்கனவே விலாவாரியாக விளக்கியுள்ளார்.

அந்த விடயங்களையும் பிரமுகர் பாலகுமாரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதற்கு அப்பாலும் அவர் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயம் நோக்கற்பாலது.

புலிகள் அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் புலிகளின் விவகாரம் அல்ல. அப்பாவித் தமிழ் மக்களின் எதிர்காலம் - நலன் - சம்பந்தப்பட்ட அத்தியாவசிய விடயங்கள் அவை. அவற்றை நிறைவேற்றுமாறு அழுத்தம் கொடுக்கும் பொறுப்பு தமிழ்மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளான புலிகளுக்கு உண்டு என்பது வாஸ்தவந்தான். ஆனால், அதற்காக அழுத்தம் கொடுக்கும் பொறுப்பு அவர்களை மட்டும்தான் சார்ந்தது என்பதல்ல.

தமிழ்ப் பொதுமக்களும் இது விடயத்தில் தங்களின் பொறுப்பை - கடமையை - பங்களிப்பை - வெளிப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதைத்தான் பிரமுகர் பாலகுமாரன் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

"போர் மூலம் அல்ல; சமாதான வழியில் - பேச்சுவாயிலாக - தீர்வுகாண விரும்புகின்றோம்" என்பதை நமது மக்களும் கிளர்தெழுந்து வீதிகளில் இறங்கி, உரத்த குரலில், உலகுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரியப்படுத்த வேண்டியவேளை வந்துவிட்டது" என்று நினைவூட்டுகிறார் அவர்.

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ள புலிகள், தமது அந்த முடிவுக்கான காரணங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். அதில் ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயம் இருப்பதை பல தரப்பினரும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

அந்த நியாயத்துக்கு வலுவூட்டும் விதத்தில் - புலிகளின் முடிவு தமிழ் மக்களின் முடிவு என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் - மக்களின் தெளிவான சமிக்ஞை வெளியுலகுக்குக் காட்டப்பட வேண்டும்; தெளிவுபடுத்தப்பட வேண்டும். அப்போதுதான் புலிகள் எடுத்த இந்த, அதிர்ச்சி வைத்தியத்துக்கு உரிய பலன் கிடைக்கும்; பேறு கிட்டும்.

# பெப்ரவரி மாத நிவாரணம் இன்னமும் வழங்கி முடியவில்லை

## செயலக வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.24

பெப்ரவரி மாதத்துக்கான உலர் உணவு நிவாரணத்தை சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் விநியோகிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ்.செயலகத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தபோதும் பல சங்கங்கள் இன்னும் இந்த நிவாரணத்தை முழுமையாக விநியோகித்துமுடிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உரிய நிவாரண ஒதுக்கீடுகள் தொடர்பான பட்டியல் ஏற்கனவே அச்சங்கங்களுக்கு வழங்கப்பட்டதாகவும் - அதன்படி செயலகக் களஞ்சியத்தில் பொருள்களைப் பெற்று விநியோகத்தை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும், சில கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை களஞ்சியத்தில் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் -

வேறு சில சங்கங்கள் முழுமையாக இவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் -

செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதனால், மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணப் பொருள்கள் கிடைக்காமல் இருப்பதுடன் களஞ்சியத்திலும் அவற்றைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஒ-10)

## நாட்டு நடப்பு

### விஞ்ஞான விந்தை கண்டீர்

கால்சட்டை பைக்குள் இருந்துகொண்டு
கத்திற்று அணில்குஞ்சு தொனியிலொன்று
மெல்லவே அதனை எடுத்து அவனும்
மெதுவாக காதண்டை வைக்க
சொல்லிய சேதி கேட்ட போதே
சோர்வுற்று அலற லுற்றான்
"நல்ல உன் தந்தையார் இப்போ
நடுத்தெரு விபத்தில் சிக்கி
அல்லலுற்று இலண்டன் வீதிதன்னில்
அவ்விடத்தில் உயிர் பிரிந்ததென்று"
பலநூறு மைல்கட்கப்பால் அந்த
பண்புசேர் இலண்டன் நாட்டில்
குலமகன் உயிர் பிரியு முன்னே
கூறிற்று செய்தி இங்கே
நலம் பெறு விஞ்ஞான விந்தையாலே
நாநிலம் வியக்கு தன்றோ!

- விகடகவி

## இன்றைய சமாதானச் சூழ்நிலையில்

# தமிழருக்கு நன்மையளிக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் அவசியம்!

## புனர்வாழ்வுக் கழகத் திட்டப்பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.24

இன்றைய காலகட்டத்தில் தமிழ்மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய பல்வேறு விதமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் திலகர்.

முன்பள்ளி கல்வி செயற்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கான ஒருநாள் வேலைப்பட்டறை நேற்று நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி மூலவள நிலையத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே லோறன்ஸ் திலகர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான சூழ்நிலை நிலவுகின்ற தற்போதைய நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அரசுடன் இணைந்து மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

எமது கழகம் முன்பள்ளி கல்வித்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. தற்போதைய பேச்சுக்கள் மூலம் சமஷ்டி முறையில் அரசியல்தீர்வு காணப்பட்டால் முன்பள்ளிகள் அனைத்தும் சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்படும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள எல்லாச் சிறுவர்களும் முன்கல்விவாய்ப்பைப் பெறவேண்டும். இவர்களுக்கான பாடத்திட்டம் பொதுவாக அமைக்கப்பட்டு தரமான கல்வியைப் போதித்து அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சிறுவர்களின் நலனில் கூடிய கவனம் எடுத்து செயற்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் அவற்றின் அபிவிருத்திக்கு முழுமையான பங்களிப்பை வழங்க முடியாதுள்ளது.

அதனால்தான் யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்குவேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய காலகட்டத்தில் சர்வதேச நிறுவனங்கள், உள்ளூராட்சித் திணைக்களங்கள் மற்றும் சுகாதாரநிறுவனங்கள், கல்வித் திணைக்களங்கள், முன்பள்ளிக் கல்வித்திட்டத்தினை மேம்படுத்த உதவிசெய்வதோடு முகாமைத்துவ திட்டமிடற் பணிகளுக்கும் உதவவேண்டும்.

தமிழ்மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய பலவிதமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது அவை சமாதானப பேச்சுவார்த்தையில் எட்டப்படும் முன்னேற்றங்களை பிரதிபலிப்பனவாக அமையவேண்டும் - என்றார் திலகர்.

இவ்வேலைப்பட்டறையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் விக்கினேஸ்வரன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் சிவநேசலிங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலாளர் பொன்மலர் இராசேஸ்வரன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், உள்ளூராட்சித் திணைக்களம், யுனிசெவ், போரூட், கியூடெக், அறவழிப் போராட்டக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-5)

# அரச, தனியார் ஊழியர்களுக்கு வருட இறுதியில் ஊதிய உயர்வு

கொழும்பு,ஏப்.24

இவ்வருட இறுதியில் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாக நிதியமைச்சர் கே.என்.சொக்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொழிற்சங்கங்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளுமுகமாக தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் தற்போது பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள சம்பள அதிகரிப்புக்குச் சமமான சம்பள அதிகரிப்பை தனியார்துறை ஊழியர்களுக்கும் வழங்குமாறு வேலைகொள்வோர் கேட்டுக்கொள்ளப்படுவரெனவும் பேட்டியொன்றின் போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் இச்சம்பள அதிகரிப்பு எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் வெளியிடப் படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

### நாளை

சித்திரை 12
வெள்ளிக்கிழமை
25.04.2003
திதி : நவமி
முற்பகல் 10.50 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
பின்னிரவு 1.30 வரை
சுபநேரம் : 6.00 - 7.30
ராகுகாலம் : 10.30 - 12.00
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சுதந்திரத்துக்காகப் போராடும் இனம் நாடாள நல்லவர்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

# செல்வா நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.24

அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 26ஆவது நினைவுநாள் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்தியாவின் திருநெல்வேலி மாவட்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் கா.பா.அறவாணன் கலந்துகொண்டு 'காந்திய நெறிகளும் தந்தைசெல்வாவின் அரசியல் இலட்சியமும்' எனும் பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக இந்தியாவின் மதுரை மாவட்டம் அன்னை திரேசா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர், முனைவர் தாயம்மாள் அறவாணன் கலந்துகொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் காலை 9மணிக்கு தந்தை செல்வா சதுக்கத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த அஞ்சலி நிகழ்விலும் நினைவுநாள் நிகழ்விலும் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு அழைப்பு விடுத்துள்ளது.

(ஒ-10)

# சேவை நீடிப்பு தொடர்பான நடைமுறையில் தெளிவில்லை

## அரச ஊழியர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களின் சேவை நீடிப்பு சம்பந்தமாக பல்வேறுபட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சேவை நீடிப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நிர்வாகசேவையில் புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால், சேவை நீடிப்புக்கென அவர்களது விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்படவில்லையெனப் பதில் அனுப்பப்பட்டதாக அறியமுடிகிறது.

ஆனால், சிலர் ஓய்வுபெற்று பல வருடங்கள் கடந்த பின்னரும் கூட தற்போது சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக சேவை நீடிப்புக் கிடைக்காதவர்கள் கூறுகின்றனர்.

அறுபது வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சேவை நீடிப்போ அல்லது ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றவோ அனுமதிக்காது அறுபத்திமூன்று வயது கடந்தவர்களை பல வருடங்களின் பின்னர் எதன் அடிப்படையில் சேவையில் சேர்த்துக் கொள்கின்றார்கள் எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அரச சேவைகள் ஆணைக்குழுவும் அமைச்சரவையும் 60 வயது கடந்தவர்களுக்கு சேவை நீடிப்பு ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு போன்றவற்றை வழங்கக்கூடாது என்று பணித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இங்கு எதன் அடிப்படையில் இந்த மீள் நியமனங்கள் வழங்கப்படுகின்றன எனவும் கேள்வி எழுப்பப்படுகிறது.

இத்தகைய நியமனங்கள் மூலம் புதிய நியமனங்களை எதிர்பார்த்து இருப்பவர்கள் விரக்தி அடைந்துள்ளதுடன் பதவி உயர்வை எதிர்பார்த்துள்ளவர்களும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இத்தகைய நியமனங்களையிட்டு பொது அமைப்புக்களும் விசனம் தெரிவிக்கின்றன.

(ஒ)

# வங்கியின் பெயர்ப்பலகை விஷமிகளால் உடைப்பு!

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி இலங்கை வங்கிக் கிளையின் கண்ணாடியினாலான பெயர்ப்பலகை விஷமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் அடுத்தடுத்து மூன்று தடவைகள் இப்பெயர்ப்பலகை உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இரவுவேளையில் பலாலி வீதி வழியாக கூச்சலிட்டபடி செல்லும் கோஷ்டி ஒன்றினது திட்டமிட்ட செயற்பாடே இதுவென அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர்.(ஒ-85)

# திருமலை, மூதூரில் பாதிக்கப்பட்டோருக்கு அடுத்த சில தினங்களில் நிவாரணம்

திருகோணமலை,ஏப்.24

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சகல சமூகத்தவர்களுக்கும் முழுமையாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும். நிவாரணப் பணிகளுக்கான ஏற்பாடுகள் அடுத்த சில தினங்களில் பூர்த்தியாகிவிடும். எமது நடவடிக்கைகளுக்கு விடுதலைப் புலிகளும் பூரண ஒத்துழைப்புத் தருவர் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உறுதியளித்துள்ளனர்.

திருகோணமலை அரச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் உரையாற்றிய துறைமுகங்கள் அபிவிருத்தி, கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறினார். மூதூர் பிரதேசத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்தும், இதனால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும் ஆராய இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், கடந்த சில நாள்களாகப் பாதிக்கப்பட்ட மூதூரில் சகஜ நிலை ஏற்படுத்துவது குறித்தும், அங்கிருக்கும் மக்களின் பாதுகாப்புக் குறித்தும் ஆராயப்பட்டது. (ஐ)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**


Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்டஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(16219)


## நினைவலைகள்

11 ஆம் ஆண்டதனில் | ஓராண்டில் உன்நினைவு




சீனியர் சுப்பிரமணியம் | கருணாகரன் சகுந்தலா (வனிதா)

| | | |
|---|---|---|
| 30.11.1931 | தாய்மடியில் | 03.05.1967 |
| 22.09.1992 | ஆண்டவனடியில் | 05.05.2002 |

திதி 24.04.2003

வானம் விடியுமென்று
வையகத்தைப் பார்த்து நிற்க
வையகமே இருளுண்டு போனதுபோல்
எம் வாழ்வின் ஒளி மறைந்ததம்மா!

தந்தை சென்று பத்தாண்டுதனில்
தாயே நீ எங்குபோனாய்?
உன்னுறவுகள் கலங்கியழ
இவ்வுலகு விட்டு எங்கு போனாய்?

பிறப்பெடுப்பேன் என்று சொல்லி
பிரிந்து சென்ற எம் உயிரே!
நீ பிரியவில்லையம்மா
எம்முறவில் கலந்து விட்டாயம்மா.......

- குடும்பத்தினர்.

க.ஜெயக்குமார்
சிறுப்பிட்டி கிழக்கு,
அரசன் திடல், நீர்வேலி.

(17111)

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 - 09 - 1930 |  | 25 - 03 - 2002 |

### திருமதி இரத்தினம்மா நடராஜா

திதி வெண்பா

விருந்தோம்பும் பண்புள்ள வளம்சேர் நீர்வேலியில்
உதித்தாள் விருந்தோம்பும் பண்பினள் இரத்தினம்மா
எனும் நல்லாள் லண்டனில் வசித்தாலும் நீர்வைக்
கந்தனையே தினந்தோறும் வேண்டி அவனடி சேர்ந்தாள்
பூர்வ பட்ச துவாதசியில்

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றென்றும் நீங்காது தவிக்கும்....


பருத்தித்துறை வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

160, St.,Pauls Avenue,
Harrow,
Middlesex HA 39pu, U.K.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரன்,
மைத்துனி, பேரப்பிள்ளைகள்.

(17103)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர்
## நாகமணி ஐயாத்துரை

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18-03-1934 | 05-05-2002 |

திதி: 24.04.2003

ஓராண்டு சென்றாலும்
நீங்காத நினைவாக
உம் பிரிவால் வாடுகின்றோம்
இல்லத்து விளக்காக
இருந்தெம்மைக் காத்தவரே!
நினைவழியா ஓராண்டில்
நெஞ்சம் நெகிழ்ந்து உம்மை
அஞ்சலி செய்கின்றோம்.

அமரர் நாகமணி ஐயாத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக இன்று (24.04.2003) வியாழக்கிழமை பலாலி வீதி, ஊரெழுவில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படும் என்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

முகவரி:
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(17119)

## இழப்பீட்டுக்கான காசோலைகளை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.24

யுத்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்குமான இழப்பீட்டுக்கான காசோலைகள் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சினால் நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இக் காசோலைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

பாதிப்புக்குள்ளானவர்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் - 18வயதுக்குட்பட்டவர்களுக்கு 25ஆயிரம் ரூபாவும் - இழப்பீட்டுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. இக்கொடுப்பனவுகளை வழங்கவென புனர்வாழ்வு அமைச்சு 60 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8-5)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உபகுழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடமாகாண பிராந்திய உபகுழுவின் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ்.ரவீந்திரன், யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரோஹான் சந்திரசேகரா மற்றும் திட்ட இணைப்பாளர் சேனக்க ஆகியோர் கலந்துகொள்வர்.(ஒ-5)

## குருநகரில் சிறுவர் பூங்கா

குருநகர் சனசமூக நிலையத்தின கிழக்குப்புறம் அமைந்துள்ள வெற்று நிலத்தில் சிறுவர் பூங்கா அமைக்கும் வேலை குருநகர் சனசமூக நிலையத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்து கலாசார அமைச்சர் இந்தச் சிறுவர் பூங்கா கட்டுமானப் பணிக்காக ஆயிரம் பைக்கற் சீமெந்தை வழங்கியுள்ளதாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் தலைவர் கி.கிறிஸ்தோபர் தெரிவித்தார்.(ஜ-51)


க.பொ.த.உயர்தரம் 2003
பரீட்சைப் பெறுபேறுகளை
எதிர்நோக்குவோருக்கு ஒரு சந்தர்ப்பம்

இந்தியாவின் பெங்களூர்
பல்கலைக்கழகத்தில்
**B.Sc., B.B.m, B.C.A,**
**B.Com+Computer**
பாடத்திட்டங்கள்

250இற்கும் மேற்பட்ட ஸ்ரீலங்காவைச் சேர்ந்த மாணவர்களுக்கு 31 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி பயிலும் வசதி.

தற்போது 150 வரையிலான மாணவ மாணவிகள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகியுள்ளனர்.

நாஷனல்
FIRST GRADE COLLEGE
கட்டணம் செலுத்தும் திட்டம் 2003 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை.
மேலதிக விவரங்களுக்கு மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்:

**WWW.Nig College.Com.**

திரு.குணவர்த்தன 01 811524
திரு.குணசேகரா 038 32657

**Company Secretarial Services pvt.Ltd**

185 c-1/1, Stanley Tillakaratne Mawatha - Nugegoda.
T.P:- 01- 851438

# சமாதானப் பேச்சு இடைநிறுத்தம் குறித்து பல கட்சிப் பிரமுகர்களின் கருத்துக்கள்

**சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தம் செய்தது குறித்து அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அந்தக் கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.**

### அமைச்சர் சந்திரசேகரன்

"இன்னும் ஒரு யுத்தத்தை சந்திக்க நாட்டு மக்களும் நாட்டின் பொருளாதாரமும் தயாராக இல்லை. எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த நியாயமான கோரிக்கைகளை அரசு மிகவும் அவதானமாகப் பரிசீலனை செய்யவேண்டும். நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைய எவரும் காரணமாகி விடக்கூடாது - என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

புலிகளின் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தை உதாசீனம் செய்துவிடக் கூடாது.

இது தனிப்பட்ட முறையில் புலிகளால் அறிவிக்கப்பட்டதல்ல. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் பல லட்சம் தமிழ் மக்களின் குரலே இது என்பதை அரசு உணரவேண்டும்.

புலிகள் சமாதானப் பேச்சுக்களை முற்றாகத் துண்டித்து விடவில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். என்பது தான் உண்மைநிலை. அமெரிக்காவில் நடைபெற்ற நிதியுதவி முன் ஆதரவு மாநாட்டிற்கு அழைப்புவிடவில்லை என்பது மட்டும்தான் காரணம் என்று கருதிவிடக்கூடாது. சர்வதேச சமூகத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் உண்மை நிலை மூடிமறைக்கப்பட்டுள்ளது என்பதே புலிகளின் ஆதங்கம்.

இவ்விடயங்களை அரசு மிகவும் கரிசனையுடன் அணுக வேண்டும் எனப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளேன் - என்றார் அமைச்சர் சந்திரசேகரன்.

இவ்விடயம் சம்பந்தமாக புலிகளின் தலைமைத்துவத்துடனும் தாம் தொடர்பு கொண்டு வருவதாகவும் அனுமதி கிடைத்தவுடன் தாம் வன்னிக்குச் செல்லவிருப்பதாகவும் அமைச்சர் சந்திரசேகரன் கூறினார்.

### மைத்திரிபால சிறிசேன எம்.பி.

"புலிகளுடனான பேச்சுக்கள் நிகழ்ச்சிநிரலுக்கேற்ப நடத்தப்படவில்லை. எனவே, பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தப் பேச்சுக்கள் முறிவடையும் என்பதை முன்னரே பல முறை நாம் தெளிவாகத் தெரிவித்திருந்தோம்" - என்றார் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன.

ஏற்கனவே பலமுறை தாம் மேற்கொண்ட அதே செயலை - உத்தியை - புலிகள் கடைப்பிடித்து நிலைமையைத் தமக்கு சாதகமாக்கிக் கொள்ள முயன்றுள்ளனர்.

பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கு மூலகாரணம் ஐ.தே.கட்சி அரசின் தவறான வழிநடத்தலே ஆகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதே இப்படியொரு நிலை யேற்படும் என்பதை நாம் தெளிவாகத் தெரிவித்திருந்தோம்.

நாட்டின் ஜனாதிபதியிடம் எந்த விதமான கருத்துக்களையும் கேளாமல் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் - என்றார் மைத்திரிபால சிறிசேன.

### பட்டி வீரக்கோன் எம்.பி.

"பேச்சு மூலம் அமைதித் தீர்வு காண்பதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. சர்வதேச சமூகம் அதற்கு ஒருபோதும் இடமகொடுக்கப் போவதில்லை" - என்றார் சமசமாஜக் கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன்.

விரும்பியோ விரும்பாமலோ இரு தரப்பினரும் பேச்சு மூலமே தீர்வு காண வேண்டும்.

ஆயுதப் போராட்டம் மூலம் கிளர்ச்சிகள் நடைபெற்று அதன்பின் பேச்சுக்கள் இடம்பெறும் போது இது போன்ற தடங்கல்கள் ஏற்படுவது சகஜமே.

கடல் பிராந்தியத்தில் இரு படைப் பிரிவுகள் செயற்படுவது இறைமையுள்ள ஒரு நாட்டுக்கு உகந்ததல்ல.

புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அரசு எப்படித் தீர்வு காணப் போகிறது என்பது தெரியவில்லை.

அமெரிக்காவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகளை அழைக்கவில்லை என்பதை புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்துவதற்குப் பிரதான காரணமாகக் கூறப்பட்டுள்ளது" - என்றார் பட்டி வீரக்கோன்.

### ரவிராஜ் எம்.பி.

"விடுதலைப் புலிகளுடன் இணக்கம் கண்ட சில விடயங்களை அரசு நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதமே பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதற்கான காரணமாகும். புலிகள் பேச்சுக்களை முற்று முழுதாக நிராகரித்து விட்டார்கள் என எவரும் கருத வேண்டியதில்லை. இதுவொரு தற்காலிக தாமதமேயாகும்".

தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்பியான என்.ரவிராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களை சொந்த இடங்களில் விரைந்து குடியமர்த்துவதன் அவசியத்தைப் புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தொடர்ந்து வற்புறுத்தியே வந்துள்ளனர்.

எனினும், அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற காரணத்தைக் காட்டி, இது விடயத்தில் ஓர் இறுதியான முடிவு மேற்கொள்வதில் அரசு தயக்கம் காட்டி வருகின்றது. இது போன்ற பல முக்கிய விடயங்கள் இன்னும் தீர்க்கப்படாமலிருப்பதும் புலிகள் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடை நிறுத்தியிருப்பதற்கான காரணமாகும்.

அரசு வெளிப்படுத்தக் கூடிய இணக்கப்பாட்டினைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களை முன்கொண்டு செல்லும் சாத்தியக்கூறுகள் ஏற்படும்" - இவ்வாறு ரவிராஜ் மேலும் தெரிவித்தார். (ஐ)

---

**கடற்புலிகளின் கடல் போக்குவரத்து பற்றிய யோசனை**

# கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்ட ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

## கண்காணிப்புக் குழுவின் அறிக்கையை அடுத்து

கொழும்பு,ஏப்.24

கடற்புலிகளின் கடல் போக்குவரத்துத் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்திருக்கும் யோசனை குறித்து ஆராய கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று கூட்டப்பட வேண்டுமென ஜே.வி.பி. கோரியிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பியிருக்கும் ஒரு கடிதத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கண்காணிப்புக்குழுத் தலைவரினால் கடந்த 3ஆம் திகதி அரசிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஓர் அறிக்கையில், ரோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி கடற்புலிகளைத் தனியானதொரு படையாக அங்கீகரிக்க அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஜே.வி.பி. அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், புலிகளின் பிரதிநிதிகள், நோர்வே அரசின் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையே இன்று வியாழக்கிழமை ஓமந்தையில் விசேட பேச்சு நடைபெறவிருப்பதாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கும் ஜே.வி.பி., இலங்கை கடற்படையின் சட்டரீதியான அதிகாரத்தைக் கடற்புலிகளிடம் தாரைவார்க்கும் யோசனை உட்பட பல யோசனைகள் கண்காணிப்புக்குழுவின் அறிக்கையில் அடங்கியிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது. (ஐ)

---

# ஆரோக்கியமான சமூகம் பகற்கனவாகிப் போகுமா?



விக்னேஸ்வரி இராமலிங்கம்
*சிறுவர் பாதுகாப்பு நிதியம்*

உலகம் போற்றிப்பேசும் விழுமியங்களையும் நடைமுறைகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு சமுதாயமாக தமிழ் சமுதாயம் காணப்படுகின்றது. அதேநேரம் அண்மைக்காலத்தில் எமது பண்பாட்டுப் புலங்களின் பின்னணியில் இருந்து வெளிவரும் பத்திரிகைச் செய்திகள் மனிதநேயமும், மனித மாண்பும் கொண்ட ஒவ்வொருவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் அதேநேரம் எமது சமுதாயத்தின் பண்பாடு, கலாசாரம், காலங்காலமாக கட்டிக்காத்து வருகின்ற விழுமியங்கள் எல்லாமே அதல பாதாளத்துக்குள் விழுந்துவிட்டனவா என்ற வினாவை பெரும்பாலும் அனைவரிடத்தேயும் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

இன்று எங்கு பார்த்தாலும் அரச, அரச சார்பற்ற உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்துமே சிறுவர்களது நலனில் அதிக அக்கறை காட்டி வருவதனை எமது நாளாந்த வாழ்வில் கண்கூடாகக் காணலாம். முன்னொரு போதுமில்லாதவாறு தகவல் தொடர்பு சாதனங்கள் அனைத்திலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான கருத்துக்களும் தடுக்கும் வழிமுறைகளும் நாடளாவிய ரீதியில் பிரசுரமாவதைக் காணலாம். இருப்பினும் அவற்றின் முக்கியத்துவம் எந்தளவு உணரப்படுகிறது என்பது கேள்விக் குறியானதே.

அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ள நிகழ்வான சிறுவர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்களினை அண்மைக் கால பத்திரிகைச் செய்திகள் சுட்டி நிற்கின்றன. உதாரணமாக சாவகச்சேரியின் மீசாலைப்பகுதியில் 16 வயது சிறுமி இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் நுணாவில் பகுதியில் 15 வயது சிறுமி ஒருத்தி இக்காலப்பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் கூறும் பத்திரிகைச் செய்திகள் அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியவை.



உண்மையான துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை பத்திரிகைச் செய்திகளை விட பலமடங்கு அதிகமாக இருக்கலாம் என ஆய்வுகள் கூறுகின்றன. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் ஒருபுறம் இருக்க சுரண்டல், பாகுபாடு காட்டுதல், சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல், மது போதைப்பொருள்களுக்கு அடிமையாகுதல் என பல்வேறு வகையில் துஷ்பிரயோகங்கள் காணப்படுகின்றன. இவற்றை விட பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருப்பவர்களே சிறுவர்களை துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்குவதாக வெளிவரும் தகவல்களை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

சிறுபராயம் என்பது மனித வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதொரு காலமாகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் தனக்குரிய இடம் என்ன? தான் யார்? என்பதைத் தீர்மானிக்கும பருவமாக சிறுபராயம் காணப்படுகின்றது. இத்தகைய முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த இப் பருவமானது எதிர்மறையானதாக இருக்குமாயின் எதிர்கால சமதாயத்தின் ஆரோக்கியம் என்பது கேள்விக்குறியாகிவிடும். சிறுவயதில் ஏற்படும் பயங்கர அனுபவங்களில் பல, சிலவேளைகளில் வாழ்நாளில் சீர்செய்ய முடியாததாக அமைந்துவிடுவதும் உண்டு. இவ்வாறான மனக்காயங்கள் சமூகத்தில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்துவதை யாராலும் தடுக்க முடியாது. சர்வாதிகாரியான ஹிட்லர், கொள்ளைராணி என வர்ணிக்கப்படும் பூலான் தேவி, இடிஅமீன் போன்றோரது வரலாறும் எம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும். பிற்காலத்தில் பாரிய அழிவுகளையும் சமூகத்துக்குப் பெரும் சவாலாகவும் அவர்களது வாழ்க்கை அமைந்ததற்கான காரணம் அவர்களது சிறுபராயத்து கசப்பான அனுபவங்கள் என்பதை வரலாற்று ஆதாரங்கள் நிரூபிப்பனவாக உள்ளன.

இன்று எமது பண்பாட்டுப் புலங்களில் அதிகரித்துக்காணப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் வன்முறைகளும் தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமானால் "ஆரோக்கியமான சமுதாயம்" என்பது பகற்கனவாகிவிடும். எனவே வன்முறைகளில் இருந்தும், துஷ்பிரயோகங்களில் இருந்தும், சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் சமூகநலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் முழுமூச்சாக பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

வன்முறைக் கலாசாரமும் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துக்காணப்படுவதற்கான காரணங்களை நோக்கின், நீண்டகால யுத்தம் என்பது முக்கிய காரணியாகின்றது. இன்று ஓரளவு அமைதியான சூழல் காணப்பட்டாலும் கூட ஆக்கிரமிக்கும் இயல்பு, இலக்கற்ற வாழ்க்கை, சமூக நலனில அசமந்தப்போக்கு எதையும் வன்முறை மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்ற மனப்பாங்கு போன்றன சிறுவர்கள் மத்தியில் மட்டுமன்றி இளைஞர்கள், முதியவர்கள் அனைவரிலுமே அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் சமகால வாழ்வுமுறையானது மிகவும் நவீன வாழ்க்கையாகிவிட்டது. பொருளாதாரத் தேடல் என்பது வாழ்க்கையின் முக்கிய இலக்காக உள்ளது. வாழ்க்கையின் இயந்திரத்தன்மைக்கு ஈடுகொடுக்க வேண்டிய அதேநேரம் பிள்ளைகள் மீதான கரிசனை, அக்கறை என்பனவும் குறைந்து கொண்டு செல்லுகின்றமையைக் காணலாம். இவையும் ஒரு வகையில் சமூக விரோதச் செயல்கள் அதிகரிக்கக் காரணமாகிவிடுகின்றன. மேலும் கட்டுப்பாடான சமூகக் கட்டமைப்பு வாழ்வு முறையில் இருந்து சமகால வாழ்வுமுறைக்கு மக்கள் மாற்றம் பெற்றுள்ளனர். உதாரணமாக அண்மைக்காலங்களில் பெரியளவில் வெளிவரும் சினிமாக்கள், இணையத்தளங்கள், வலைப்பின்னல் அமைப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இன்று சிறுவர்கள் தொடக்கம் இளைஞர்கள் வரை அனைவரிடமும் குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்பட ஏதுவாக அமைந்துவிடுகின்றன.

எனவே, சிறுவர் மத்தியில் துஷ்பிரயோகங்களைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் இளைஞர்கள் மத்தியிலும் வன்முறைப் போக்கினைக் குறைத்து நல்லதொரு ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வழியில் சமூக நலனில் அக்கறை கொண்ட அனைத்து நிறுவனங்களுமே உறுதியுடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும். உளவியலைச் சமநிலைப்படுத்தக் கூடிய சாத்தியங்கள் கொண்ட நிலையங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்கக் கூடிய தொழில் நிலையங்கள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை அதிகளவில் செயற்படுத்துவதனூடாக ஓரளவுகேனும் இப்பிரச்சினைகளுக்கும் தீர்வினைத்தரும். அதுடன் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தனிநபர் ஒவ்வொருவரும் மனித மாண்புகளுடன் செயற்படுவது அவசியம். ☆

**சிறுவர்களைப் பேணுவதற்கு அதிக முக்கியத்துவம் தாருங்கள்**


இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் பஜாஜ் மோட்டார் சைக்கிளுடன் வெற்றி நிச்சயம் !
விசேட கொடுப்பனவு!
2003 ஏப்ரல் 30 வரை நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பஜாஜ் மோட்டார் சைக்கிளுடனும் ஹெல்மட், ஜக்கட் மற்றும் ரைடர் Bag ஒன்று இலவசம்.
Pulsar
விலை ரூபா 107,835/-
• 150 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
Caliber croma
• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
BOXER AT
விலை ரூபா 64,200/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
BOXER CT
விலை ரூபா 68,568/-
• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
Caliber
M80 FOUR STROKE
விலை ரூபா 55,783/-
• 74 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.
Legend
விலை ரூபா 83,811/-
• 145 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
* சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 65 கி.மீ.
BOXER CT Deluxe
K-Tec Technology
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.
75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600
பெக்ஸ் : 074-700677, 687175. ஹொட்லைன் : 074-715050
அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி ட்ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
: குறிஞ்சி ட்ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி.
பஜாஜ் பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்திய

# தமிழரின் படைப்பலம் நிலைத்திருக்க தொடர்ந்து பணப்பலம் அவசியமாகும்!

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

அராலி,ஏப்.24

இன்றைய சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்தியது தமிழரின் படைபலம். அது தொடர்ந்து நிலைத்திருக்க பணபலம் அவசியமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி.

கடந்த திங்கட்கிழமை சங்கானை சிவப்பிராகாச மகாவித்தியாலயத்தில்



இடம்பெற்ற "வரி சம்பந்தமான தவறான எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வும், சமாதானச் சூழ்நிலைக்குப் பின்னர் மக்களின் பங்களிப்பும்"என்ற பொருளிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சமாதானச் சூழ்நிலையால் வெடிச் சத்தங்கள் மட்டுமே ஓய்ந்துள்ளன. யாழ்.குடாவில் 40ஆயிரம் படையினர் உள்ளனர். இவர்களுடைய விரல்கள் விசைவில்லில் தான் இருக்கின்றன. இந்தத் துப்பாக்கிகளுக்கு மத்தியில்தான் நாம் வெறுங்கையுடன் பணியாற்றுகின்றோம். இன்று சாதாரண சிங்கள மக்கள் வாழும் வாழ்க்கை எமக்கில்லை. சமாதானம் வந்து ஒரு வருட காலத்தில் எம் மக்களுக்கு கிடைத்த பயன்தான் என்ன? யாழ்.மண்ணில் பாதுகாப்பிற்காக படைகள் நிறுத்தப்பட்டுள்ளனவாம். இவர்கள் யாருக்கு பாதுகாப்பு வழங்குகிறார்கள்? இவர்களை பாதுகாப்பு வழங்குங்கள் என்று யார் கேட்டது? இந்த இராணுவம் சமாதானத்தைத் தரும் என்றால் யாழ்ப்பாணத்தை ஏன தக்கவைக்க முயலவேண்டும். அதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

யாழ்.குடா நாட்டை விட்டு நாம் வெளியேறிய பின்னர் அன்றைய பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த கேணல் அனுருத்த ரத்வத்தை கொடியேற்றிவைத்து உரை நிகழ்த்துகையில் "தற்பொழுது நாம் மேற்கொண்டு வெற்றி கண்ட இராணுவ நடவடிக்கை மூலம் 85வீதமான புலிகளை அழித்திருக்கின்றோம். இனி அவர்கள் தலை தூக்கவே முடியாது" - என்றார்.

இன்று நாம் இத்தனை துப்பாக்கிகளுக்கும் மத்தியிலும் நிராயுத பாணிகளாக வீறு நடை போட்டுக்கொண்டு எமது அரசியல் பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருப்பதற்கு இரண்டு விதமான நம்பிக்கைகள்தான் காரணம். மக்கள் எம்மைக் காப்பாற்றுவார்கள் என்பது ஒன்று. இரண்டாவது சாவை எமது கழுத்துகளில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு திரிகின்றோம் - என்பது.

...வை மனதால் வெல்ல வேண்டும். அ... வென்றால் யாருக்கும் பயப்பட ...ண்டிய அவசியம் இல்லை; சரணடையத் தேவையில்லை. எமது இனம் நெருப்புக்குள் இருக்கும் போது குளிரூட்டப்பட்ட அறைக்குள் இருந்து பேசியவர்கள் இன்று சமாதானம் பற்றி பேசுகிறார்கள். ஒரு கணமும் எம்மால் எமது மக்களின் சுதந்திரத்தை விற்றுப பிழைக்க முடியாது. மானத்தோடு போராடி வெல்வோம் அற்றேல் மரித்துப் போவோம். உயிருக்கு பயந்தபடி நடத்தும் உல்லாச வாழ்க்கை எமக்குத் தேவையில்லை.

எமது உண்மையான நிலையை சர்வதேச சமூகம் என்றோ ஒரு நாள் உணர்ந்தே தீரும். இது எமது தலைவரின் நம்பிக்கை. இன்று நாம் பேச்சு மேடையில் வலியுறுத்தி வருவது யாதெனில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம். அங்கு தமிழர் தன்னாட்சியுடன் வாழவேண்டும். தமிழர் சுய நிர்ணய உரிமையோடு வாழவேண்டும். நாம் புதிதாக தமிழீழம் கேட்டுப் போராட வரவில்லை. எமது மூதாதையர் பல்வேறுபட்ட ஒப்பந்தங்களும சத்தியாக்கிரகப் போராட்டங்களும நடத்தி இறுதியில் வெற்றி கிட்டாது ஒப்பந்தங்கள் யாவும் கிழிதெறியப்பட்டபோது இனித் தமிழரின் தீர்வுக்கு ஒரே வழி தனித் தமிழீழம்தான்" என்றனர். அந்த வழியை இன்றைய சந்ததியினராகிய நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். எமது பேச்சினை செவிமடுத்துக் கொண்டிருக்கும் நீங்கள் இந்த நேரத்திலே ஒரு தெளிவான சிந்தனையுடன் இருக்கவேண்டும். அதேநேரம் இங்கே நாம் கூறும் கருத்து விதைகளை காவிச்சென்று உங்கள் பிரதேச மக்களிடையே விதைக்க வேண்டும்.

இந்தவகையில், வரி பிரச்சினை பற்றி கூறப்போனால் இன்று எல்லோர் மத்தியிலும் இது பற்றிப் பேசப்படுகிறது. தத்தமது சொந்த தேவைகளுக்காக தென்பகுதிகளிலிருந்து எடுத்து வரப்படும் பொருள்களுக்கு எந்தவிதமான வரிகளும் விதிக்கப்படமாட்டாது. அதேநேரம் மரணச்சடங்கு போன்ற இன்னோரன்ன தேவைகளுக்காக எடுத்துவரப்படும் பொருள்களுக்கும் வரிவிலக்கு உண்டு. ஆனால், விற்பனைக்காக எடுத்துவரப்படும் பொருள்களுக்கு மட்டுமே வரி விதிக்கப்படுகின்றது. இதை நீங்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த மண்ணில் வித்தாகிய மாவீ...ளுக்கு நாம் செய்ய வேண்டிய ...மை ஒன்று இருக்கின்றது. அவர்களது கனவை நனவாக்க நாம மாவீர் துயிலுமில்லங்களுக்குச் சென்று பூப்பறித்துப் போட வேண்டிய அவசியமில்லை. மாறாக தெளிவான சிந்தனை, விடுதலை உணர்வு, விழிப்புணர்வு, அர்ப்பணிப்பு என்ற விழுமியங்களை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும். அதற்கு இந்தச் சமாதானச் சூழ்நிலை நல்லதொரு சந்தர்ப்பமாகும். உங்கள் தமிழ்ப் படைப் பலத்தால் இந்தச் சமாதானம் வந்தது. இனிமேலும் அது பலம் இழந்து விடக்கூடாது. ஆகவே, எமது படைபலம் மிகவும் முக்கியம். அதற்கு உங்கள் பணபலம் தேவையாகும். அதுதான் நாம் அறவிடும் வரிப்பணம் ஆகும் - என்று தெரிவித்தார் தமிழினி. (ஒ-14)

## தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியருக்கு!

தென்மராட்சி,ஏப்.24

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி சங்கத்தலைவர் கேட்டுள்ளார்.

## திறந்த பல்கலை. கற்கைநெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் ஏப்.24

திறந்த பல்கலைக்கழகத்தில் 2003, 2004ஆம் ஆண்டுகளுக்கான விஞ்ஞானமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ்.பிராந்திய நிலையத்தில் உள்ளதெனவும்-

தேவையானோர் அப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து யாழ்பிராந்திய நிலையத்தில் ஒப்படைக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-69)

## மணல் விநியோகம் இடைநிறுத்தம்

செம்பியன்பற்று ஏப்,24

மணல்காடு, குடத்தனை பகுதிகளில் நடைபெற்றுவரும் மணல் விநியோகம் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது என வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-36)

## இலவச யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24


இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் இலவசமாக நடத்தப்படும் யோகாசன, தியான வகுப்புகள் வாரத்தின் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 4.00 மணிமுதல் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

யோகாசனப் போதனாசிரியர் என். சிவநேசலிங்கராசாவினால் இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இதில் சுவாசத்தியானம், உருவத்தியானம், ஔத்திரிதியானம், மூலிகை உணவு பாவனை ஆகியன பயிற்றுவிக்கப்படுவதாகவும் -

மன அழுத்தம், உள நெருக்கீடு ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கு இப்பயிற்சிகள் உறுதுணைபுரிவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த யோகாசன தியான வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் பயிற்சி வகுப்பு நடைபெறும் தினங்களில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்திற்கு நேரில் வந்து இணைந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)



நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறுவரும் இலவச யோகாசனப் பயிற்சி வகுப்பின்போது யோகாசன ஆசிரியர் என். சிவநேசலிங்கராசா யோகாசனப் பயிற்சி வகுப்பை நடத்துவதை படங்களில் காணலாம்.

உயிர் குடிக்கும் வாகன விபத்துக்கள்!

## 21 நாள்களில் 92 பேர் பலி; சாரதிகள் மீது பாய சட்டம் தயார்

கடந்த 21 நாள்களில் நடந்த 86 வாகன விபத்துக்களில் சுமார் 92 பேர் பலியாகியுள்ளனர். கூடுதலான வேகத்தில் வாகனங்கள் செலுத்தப்பட்டமையே இவ்விபத்துக்களுக்கு காரணம் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

வாகன விபத்துக்கள் பெருகி வருவதையடுத்து வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை மீறும் சாரதிகளுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிப்பதென அரசு தீர்மானித்திருக்கிறது. இதன்படி இதுவரை அறவிடப்பட்ட 250 ரூபா அபராதத் தொகை 1,000 ரூபாவாக அதிகரிக்கப்படவிருக்கிறது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை இரு வாரங்களில் வெளியிட உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. (ம)

## வாசகர் திருமுகம்

### ஓய்வூதியர்களை வருத்துவது ஏன்?

உடுவில் உப அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இருந்து ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுடைய வவுச்சர்கள் 05.04.2003 சனிக்கிழமை கிடைத்து விட்டன. அதில் 08.04.2003இல் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 08.04.2003 அன்று காலை 8.30மணியிலிருந்து 10.30 மணிவரை ஓய்வூதியர்கள் காத்திருந்தும் காசோலையும் பட்டியலும் காரியாலயத்திலிருந்து வங்கிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. கோபமுற்ற ஓய்வூதியர் சிலர் உப அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் காரசாரமாக வாதாடியதன் பின்னரே காசோலை வங்கிக்கு அனுப்பப்பட்டது. எத்தனையோ முதிய ஓய்வூதியர்கள் நீண்ட தூரங்களிலிருந்து வந்து காத்திருந்துவிட்டு வாய் முணுமுணுப்புடன் வீடு திரும்பினர். ஆகவே, முதிய ஓய்வூதியர்களுக்கு இவவாறான தொல்லை ஏற்படாது ஒழுங்கான முறையில் ஆவன செய்யும்படி அரசாங்க அதிபரை பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

- பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்.

### இயற்கையை அழிக்காதீர்கள்!

இன்று யாழ்.குடாநாட்டில் உள்ள உவர் நிலத்தை மாற்றி அமைக்க நல்ல இதயம் கொண்ட ஒருசிலர் முயற்சிக்கும் அதேவேளை, ஒருசிலர் தங்களது சுயலாபத்துக்காக கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள கற்களை தோண்டி விற்பதும், கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் அதற்கு ஊக்கமும் உதவியும் அளிப்பதும் வருந்தத்தக்கது.

அச்சுவேலி தெற்குப் பகுதியில் நெல்வயல்கள் பனை மற்றும் தென்னை மரங்கள் அதிகம் கொண்ட இடம் கொண்ணதீவு. இதன் ஒரு பகுதியாக கடற்கரை அமைந்துள்ளது. இவ்விடத்திலேயே தொடர்ந்து கல்லு தோண்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் தடுத்தும் இதுபற்றி அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர்களிடம் முறையிட்டும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. ஆகவே இயற்கையைச் சீரழிக்கும் இச் செயலை அதிகாரிகள் தடுத்து நிறுத்துவார்களா?

அச்சுவேலி. - உத்தமன்.

### கல்வி கற்க விடுங்கள்!

தற்போது ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் தமது பாடங்களை மீட்டல் செய்வதிலும் கற்பதிலும் ஆர்வம் காட்டி இரவு - பகலாகப் படித்து வருகிறார்கள். இந்நிலையில், கோயில் விழாக்கள் மற்றும் வீட்டுக் கொண்டாட்டங்களில் காதைச் செவிடாக்கும் விதத்தில் ஒலிபெருக்கிகள் ஒலிக்க விடப்படுகின்றன.

விழாக்களின்போது வழிபாட்டிடங்களில் இடம்பெறும் முக்கிய வீதிச் சந்திகளின் முன்பாக ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு பெரும் அலறலாக ஒலிக்க விடப்படுகின்றன. இதன் காரணமாக பரீட்சைக்குத் தம்மைத் தயாரப்படுத்தும் மாணவர்கள் கற்க முடியாத சூழல் உருவாகி வருகிறது.

குடாநாட்டில் பின்தங்கிவிட்ட கல்வியை வளர்க்கப் பல அமைப்புக்கள ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், ஒலிபெருக்கிகளால் மாணவர்களது கல்வி பாதிக்கப்படும் நிலையை சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பதாகக் கூறிக்கொள்வோர் உணராது இருப்பது பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் மாணவர்களுக்கு மிகுந்த மனவேதனையை உருவாக்கி உள்ளது.

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு? மாணவர் பரீட்சையில் சித்தியடைவதற்கான சூழல் உருவாகாதுபோனால் கல்விக்கான அமைப்புகள் இயங்குவதனால் என்ன பயன்?.

எனவே, மாணவர்களது கல்வியில் அக்கறையுடன் இயங்கும் பொது அமைப்புக்கள் ஒலிபெருக்கிகளால் ஏற்படும் தொல்லையை இன்றைய சூழ்நிலையிலாவது தடுத்து நிறுத்தி மாணவர்கள் பரீட்சைக்கு தயார் படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவார்களா?

குருநகர். - ஞா.திலீப்குமார்.

### சூழலை பாதுகாப்போம்!

இப்பொழுது குடாநாட்டில் நாகரிக மயக்கங்களில் சிக்கியுள்ளவர்களே அதிகம். ஆனால், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பழக்கம் மட்டும் இங்கு இன்னமும் பழக்கத்தில் வரவில்லை. குடாநாட்டில் தொற்றுநோய்கள் அதிகரித்துக்கொண்டிருப்பதற்கு ஒரு காரணம் வீதிப்புனிதம் பேணப்படாததே என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தநிலையில், தலைநகர் கொழும்பில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும குப்பையகற்றும் முறையை இங்கும் அனுசரிப்பதில் என்ன தவறு? தடல்புடலாகக் காலைப் பொழுதில் நாளாந்த விடயங்களைக் கவனிப்பதற்கு வீட்டை விட்டுச் செல்லும் குடும்ப அங்கத்தவர்கள் குப்பை கூளங்களைச் சேர்த்துவைத்து - அவற்றைத் தெருவில் கொட்டிவிடாமல் - குப்பை அகற்றுவோரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நகர நிர்வாகம் தன் பணியாக அந்த அந்தப் பகுதி மக்களுக்கு குறிப்பிட்ட தினங்களை அறிவித்து அன்றைய தினங்களில் குப்பைகளைச் சேகரிப்பது, சூழல் மாசடையாது பாதுகாக்க நல்ல வழியாகும்.

குறியீடு பதித்த கொள்கலன்களை கொடுத்துதவினாலும் நன்மையே. ஓர் இடத்தில் வீதிக் குப்பையிருந்தால் எங்கோ இருந்து தன் குப்பையை அவ்விடத்துக்குக் கொண்டுவந்து கொட்டிவிடக் காத்திருக்கும் பொதுமக்களின் மனப்போக்கும் ஒரு கசப்பான உண்மையே.

ஆகவே, இனியாவது பிரதேச நிர்வாகங்களும் பொதுமக்களும் ஒன்றிணைந்து சூழலைப் பாதுகாப்பதில் ஈடுபடவேண்டும்.

நேசன்.

# டெஸ்ட் அணியில் களுவிதாரண! 4 சுழற்பந்து வீச்சாளர்களும் சேர்ப்பு!!

கொழும்பு,ஏப்.24

நியூஸிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணியில் ரொமேஷ் களுவிதாரண சேர்க்கப்பட்டுள்ளார். 15 பேர் கொண்ட இவ்வணியில் 4 சுழற்பந்து வீச்சாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

விக்கெட் காப்பாளரான களுவிதாரண, கடந்த இரு வருடங்களாக டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவில்லை. நியூஸிலாந்துடனான போட்டிகளில் அவர் 7ஆவது வீரராக களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹஷான் திலகரட்ணவின் தலைமையில் இலங்கை அணி இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இதேவேளை, அண்மையில் கிரிக்கெட் சபை அணியின் சார்பில் நியூஸிலாந்துக்கு எதிராக சதம் குவித்த மஹேல ஜயவர்த்தன, டெஸ்ட் அணியில் தனது இடத்தை உறுதிசெய்துள்ளார்.

ஆனால், இலங்கை 'ஏ' அணிக்குத தலைமை தாங்கிய ரஸல் ஆர்னோல்ட், டெஸ்ட் அணியில் சேர்க்கப்படவில்லை.

ஜெஹன் முபாரக், தில்ஹார பெர்னாண்டோ ஆகியோரும் சேர்க்கப்படவில்லை. மைக்கல் வண்டோர்ட், திலகரட்ண தில்ஹான் ஆகியோரும் மத்திய வரிசை வீரர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரதான சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனுடன் சுழற்பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் சோபிக்கக்கூடிய குமார் தர்மசேன, உபுல் சந்தன, கௌசல்யா லொக்கு ஆரச்சி ஆகியோரும் இவ்வணியில் இடம்பெற்றுள்ளனர்.

சனத் ஜயசூரியவும் சுழற்பந்து வீச்சில் ஈடுபடக்கூடியவராகவுள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டி நாளை பி.சரவணமுத்து அரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

முத்தையா முரளிதரன் அங்கம் வகிக்கும் தமிழ் யூனியன் கழகத்திற்குச் சொந்தமான இம்மைதானம் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமானது எனபது குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர்க் காணிக்கைகள்

எமது சக மாணவன் ச.மனோகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதி வருட மாணவர்கள்,
வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

(17156)

## வீரவணக்கம்

*10. 03. 2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் காவியமான.....*



**போசன் நவனீதன்** (சிந்து)
செல்வரெத்தினம் ஜெகன்

மண்ணில் 1978 - 04 - 18
மண்ணுக்காக 2003 - 03 - 10

இன்று அன்னாரின் வீட்டுக்கிருத்தியமும் அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்தோடு அன்று காவியமான ஏனைய போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

*ஆடியபாத வீதி,*
*கொக்குவில் மேற்கு.*

(17154)

குடும்பத்தினரும்
நண்பர்களும், போராளிகளும்

## பதவி வெற்றிடம்

இலங்கையில் இயங்கும் பிரபல கம்பனிக்கு யாழ். விநியோக விற்பனை பிரதிநிதி (*DSR*) தேவை.

தகைமை:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் திறமைச் சித்தி.
க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி.

வயது :- 25 - 35 வருடங்கள்.

ஆங்கிலம், சிங்களம் பேசக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுய கையெழுத்தில் தயாரித்த சுயவிவரக்கோவையை 30.04.2003 இற்கு முன்னதாக அனுப்பவும்.

விளம்பர இல. 1860
மே/பா உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(17151)


## திகழொளி கல்வி நிலையம்
வரணி

**O/L Day Classes**

**ஆரம்பம்: 24.04.2003**
மு.ப. 8 மணி

**A/L 2005**

வகுப்புகள் நடைபெறுகின்றன.

தமிழ், இந்துநாகரிகம் } சிவமுருந்தன்
புவியியல் - மயூரன்
பொருளியல் - விக்கி
வரலாறு - சுஜிகரன்

தனிப்பாடம் எடுக்கலாம்.

(C-27536) - நிர்வாகி.



## ட்ரைவிங்

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் ஓட்டுபவர்களுக்கு மிகவிரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.

*தொடர்பு:-* **க.ரூபன்**
44B, 1ஆம் மாடி,
ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13.
T.P.:071 298551, 0777 750023

(C-27528)


## நல்லூர் பிரதேச சபை

### 01. கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் (*ICTAD) M-9* பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்து கோரப்படுகிறது. கேள்விப்பத்திரங்கள் 24.04.2003 வியாழக்கிழமை தொடக்கம் 02.05.2003 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை உரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும், சீல் வைத்த கேள்விகளை 05.05.2003 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் தங்கள் கேள்விகளின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபைக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியில் இடவும். மறுபிரதியை பி/உ.உ-ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும், மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | கேள்வி வைப்பு கட்டணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் (பெறுமதி சேர்வரியுடன்) |
|---|---|---|---|
| 01. | நவீன சந்தை மேல்மாடி படிக்கடைத் தொகுதி படிப்பகுதி. கடைப்பகுதியாக இரு கூறாக்கல் வேலை. | 700/= | 300/= |
| 02. | காவலாளிகள் குடில் அமைத்தல் வேலை | 250/= | 300/= |

### 02. அறிவித்தல்

**பயணிகள் விடுதி அனுமதி**

எமது சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் பயணிகள் விடுதிகள் நடத்துவோர் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். தவறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செல்லையா செல்வரத்தினம்,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C/27535)

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

வடக்கு- கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 8.30 மணி - பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணி.

முற்பகல் 10.00 மணி - மருதங்கேணி பிரதேச செயலக அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.

முதலாம் சுற்றில் வெற்றியீட்டிய பிரதேச செயலகங்களுக்கிடையிலான இரண்டாம் சுற்றுப்போட்டிகள் பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

(ஒ-5,86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.24

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும், ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதென யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்ஜே.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றுப்போட்டிகள் எதிர்வரும 26 ஆம் திகதி ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.24

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கொக்குவில் வராசி விளையாட்டுக்கழகமும் சண்டிலிப்பாய் சிவசக்தி விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன.

(ஒ-5,86)


**A/L 2005**
தமிழ்
திரு.நாக.தமிழிந்திரன்
ஆரம்பம்:
நாளை (25.04.2003) வெள்ளி
4.00 மணி (ப.நே.)
N.E.I நல்லூர்.
(C-27537)


## துயர் பகிர்கின்றோம்

எமது மன்ற உறுப்பினர் ச.மனோகரன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*யா/பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

(17158) - வணிகமாணவர் மன்றம்.

## மரண அறிவித்தல்கள்

### ஐயாமுத்தன் கதிர்காமு
(சிவலையப்பா)

மாசேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஐயாமுத்தன் கதிர்காமு நேற்று (23.04.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி மீனாட்சியின் அன்புக் கணவரும் இலட்சுமி, இராசம்மா, சின்னம்மா (கனடா), விசாலாட்சி (நோர்வே), இரத்தின பூபதி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நாகிட்டினர், காலஞ்சென்ற மு.வீரகத்தி மற்றும் க.சுப்பிரமணியம் (கனடா), தா.வல்லிபுரம் (நோர்வே), குலவீரசிங்கம் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2003) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாசேரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.மீனாட்சி
(மனைவி)

*மாசேரி,*
*வரணி.*

(17160)

### திருமதி பத்மநாதன் செல்வம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும், தற்போது 467,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய பத்மநாதன் செல்வம் 22.04.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும் நித்தியானந்தன், லலிதா, ராதா, ரஞ்சிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரன், சந்திரகுமார், சிறிதரன், ரமணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.நித்தியானந்தன் (மகன்)
நித்தியானந்தா நகைத் தொழிலகம்,
கன்னாதிட்டி.

*467, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம.*

(17150)

### திருமதி வைத்திலிங்கம் சின்னப்பிள்ளை

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் சின்னப்பிள்ளை அவர்கள் நேற்று (23.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் பூபாலசிங்கம், இராசமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகராசசிங்கம், மல்லிகாதேவி ஆகியோரின் மாமியாரும் மதிவதனன் (லண்டன்), இராசவதனன் (லண்டன்), திவ்வியா (லண்டன்), ரெதராசா (ஆஸ்திரேலியா), கரன், நிஷந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2003) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல நீர்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகராசசிங்கம்
(மருமகன் - முன்னாள்
முகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.ச.)

*நீர்வேலி வடக்கு,*
*விளான் ஒழுங்கை,*
*நீர்வேலி.*

(17159)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 467 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 22.04.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5855213-5869078 |

வெற்றி இலக்கங்கள் **24 31 32 34**



லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,866,700/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,467,350/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 269,000 | 10 | 2,690,000 |
| 2 இலக்கங்கள் | 24,700 | 20 | 494,000 |
| 1 இல + லக்கினம் | 24,410 | 30 | 732,300 |
| 2 இல + லக்கினம் | 2,294 | 100 | 229,400 |
| 3 இலக்கங்கள் | 653 | 500 | 326,500 |
| 3 இல + லக்கினம் | 59 | 5,000 | 295,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,866,700 | - |
| மொத்தம் | 321,120 | - | 5,167,200 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **5,167,200/-**

தொடர் இல. 5873042க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஏப்பிரல் 25ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிச்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4890333-0-63
4880052-2-46
4888648-9-21
4888842-7-74
4884940-0-64

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



## இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்

யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை



ஸ்ரீ சோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீ வெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்
மணிசாமி அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்தகாரியம் பார்க்கப்படும், திருமணத் தடங்கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித் தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? செய்வினை, பில்லி, சூனியம், வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
மணிசாமி அவர்கள்
54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
(17148) பழைய லிங்கம் கூல்பார் அருகில், யாழ்ப்பாணம்.


## விழிநீர் சொரிகின்றோம்

ஊர்காவற்றுறை பிரதேச சபையில் பிரதம எழுதுநராகக் கடமையாற்றும் க.பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புச் சகோதரன்

### க.சபாரத்தினம்

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை பிரதேச சபை )*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர், ஊழியர்கள்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.
(சி-27534)

## ஆறாத்துயரில் ஆறு ஆண்டுகள்

தோற்றம் 13 - 10 - 1946



மறைவு 01 - 05 - 1997

### அமரர் சபாரத்தினம் கனகசபாபதி

திதி-24.04.2003

ஆண்டுகள் ஆறாயினும்
ஆறவில்லை எம்துயரம்
ஆயிரம் உறவிருந்தென்ன
அன்புடையோர் உம்போல் உளரோ?
வருடங்கள் யுகங்கள் ஆனாலும்
மறப்போமா உம் மகிமைமிக்க நினைவுதன்னை?

ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

இணுவில் தெற்கு, இணுவில். (17153) அன்பு மனைவி.

## 10.03.2003 அன்று சர்வதேசக் கடற்பரப்பில் சிறிலங்காவின் கடற்படை விடுதலைப் புலிகளின் வணிகக்கப்பலைத் தாக்கி அழித்தவேளை

# வீரகாவியமான கதாநாயகர்களின் 45ஆம் நாள் நினைவாக



2nd ஓவிசர்
சுடர்வளன்
முல்லை/கள்ளப்பாடு



ஏபிள்சீமன்
எழில் கண்ணன்
யாழ்./ நீர்வேலி



3rd ஓவிசர்
மோகன்
திருமலை/பன்குளம்



கடேற்
தூயவன்
கிளி/திருவையாறு



ஏபிள்சீமன்
இளம்பரிதி
யாழ்./ அளவெட்டி



கப்பல் கப்டன்
சிலம்பரசன் (ரஞ்சன்)
ஆழியவளை



சீவ் ஓவிசர்
இரும்பொறை
யாழ்./வண்ணார்பண்ணை



சீவ் எஞ்சினியர்
அம்பிகைவாணன்
யாழ்./சித்தங்கேணி



3rd எஞ்சினியர்
அமுதன்
கிளி./மட்டுவில்நாடு



2nd எஞ்சினியர்
தணிகைமாறன்/
தனேந்திரன்
யாழ்./ மாரீசன்கூடல்



போசுன்
நவநீதன்/சிந்து
யாழ்./ சிகரக்குவில்

கடலிலே காவியம் படைத்திட்ட புலிகள் களமது ஓய்ந்திட்ட காலந்தனிலே கடல்தனில் வாணிபஞ்செய்திடவென்று கப்பலில் பயணத்தை மேற்கொண்டவேளை, ஆழ்கடல் நடுவிலே அரக்கர்கள் கூட்டம் அமைதியை குழப்பியே, ஒப்பந்தம் மீறியே, கப்பலைத் தாக்கினர்; சீரிய புலிகள் சீற்றம்கொண்டபோதும், எதிரியை அழித்திட பலமுள்ளபோதும், அமைதியை காத்தனர், ஒப்பந்தம் பேணினர், சாவினைத் தழு வியே காவியமாகினர். கடலிலே காவியம் படைத்திட்ட புலிகளின் புகழ்தனை சரித்திரம் சொல்லிடுமன்றோ!

வடமராட்சி கிழக்கு மக்கள் சார்பில்
வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழு,
மருதங்கேணி.

(17152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சு விநியோகம

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக குஞ்சுகள் 24-04-2003 வியாழக் கிழமை பிற்பகல் விநியோகிக்கப் படும். அத்துடன் Marec Vaccine போட்ட சிவப்பு சேவற் குஞ்சுகளும் உண்டு. முன்கூட்டியே பதிவுசெய்ய வும் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17061)

## புறொயிலர் விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர் கல்பேட் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.61, சேர் பொன்.இராம நாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (17134)

## திருமண சேவை

சீதனம் கொடுத்து திருமணம் செய்ய முடியாதிருப்பவர்கள், சீதனம கொடுத்து செய்யக்கூடியவர்கள் ஆண கள், பெண்கள் உள்நாட்டிலோ, வெளி நாட்டிலோ இருப்போர் நேரிலோ தபால மூலமோ தொடர்புகொள்ளலாம் உள் நாட்டு, வெளிநாட்டு விவரங்கள் உள் ளன. செல்லம்மா திருமணசேவை, கிழான் சங்கத்தடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம் T.P.01 422619, 0777-047145, 0777- 047314 (16900)

1958, அச்சுவினி, செவ்வாய் 1 கௌரவ குடும்பம், லண்டன் கொம்பி யூட்டர் இஞ்சினியருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. மண மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய நாடுங்கள்: துரை விமலா, லகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (17114)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த 1972இல் பிறந்த, மகநட்சத்திரம் (4ஆம் பாதம்), செவ் வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் குறைந்த, தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் பெண்ணிற்கு பெற்றோர் ஏற்ற வரனை தேடுகின்ற னர். சைவ போசனம் விரும்பத்தக் கது. ஜாதக குடும்ப விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1853 C/o உதயன். (17126)

## தவறிவிட்டது

இல.6, கன்னாரலேன், நல்லூரைச் சேர்ந்த காசிநாதன் தியாகராசா என்ப வருடைய தே.அ.அட்டை (இல. 571721180X) தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (சன்மானம் வழங் கப்படும்.) (17127)

21ஆம் திகதி கைத்தொலைபேசி ஒன்று (மோட்டறோலா) இராசவீதி யில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள சுகன்ஜா நகையகம், டாக்டர் சுப்பிர மணியம் வீதி, சுன்னாகத்தில் ஒப்ப டைத்துதவவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) 0777-176238. (17137)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.24

சி.கா.செந்திவேல் எழுதிய 'வட புலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்திகேசனும்' என்ற நூலின வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 4.30மணிக்கு நெல் லியடி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் க.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புதியபூமி வெளியீட்டகம் கேட்டுள்ளது.

## கடனுதவி திட்டத்தில் கட்டுமரங்கள்

செம்பியன்பற்று,ஏப்.24

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள எட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு கடனுதவித் திட்டத்தின்கீழ் இதுவரை 47 கட்டுமரங்களை ஐநா. அபிவிருத்தித்திட்ட நிறுவனம் வழங்கி யுள்ளது.

ஒரு கட்டுமரத்தின் பெறுமதி 16ஆயிரம் ரூபாவாகும். ஒவ்வொரு பயனாளியும் 3ஆயிரத்து 200ரூபாவை முற்பணமாகச் செலுத்த வேண்டும். மிகுதி 12ஆயிரத்து 800ரூபாவை தவணை முறையில் செலுத்த வேண் டும்.

தவணை முறையில் செலுத்தப் படும் பணம் சுழற்சி முறையில் வேறு ஓர் அங்கத்தவருக்கு கட்டு மரம் வழங்கப் பயன்படுத்தப்படும். (ஓ-56)

# மீண்டும் 'பாஸ்' நடைமுறை!

அராலி,ஏப்.24

பொன்னாலைக் கடற்கரை தொடக் கம் அராலி தெற்குத் துறைமுக வரையிலான கடற்பரப்பில் கடற் றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலா ளர்களுக்கு மீண்டும் "பாஸ்" நடை முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாகக கூறப்படுகிறது.

இதனால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி யுள்ளதாகவும் தெரிவிக்கபட்டது. (ஓ-14)

## அறிவித்தல்

**வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம்**

**ஏப்ரல் 28ஆம், 29ஆம் திகதிகளில்**

**மண் விநியோகம் நடைபெறமாட்டாது.**

(17139)

தலைவர்,

சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம்

வடமராட்சி கிழக்கு,
குடத்தனை.

## HDL-HUDEC MCR செயல் திட்டம்

மென் கொங்றீங் கூரைத் தகடுகள் மற்றும் சிமெந்துக்கற்கள் என்பன இயந்திரங்கள் மூலம் தயாரிப்பதற்குத் தொழிலாளர்கள் தேவை. கட்டடத் தொழிலில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் கியுடெக் அலுவலகத்தில் வேலை நேரத்தில் உடன் தொடர்புகொள்ளவும்.

- நிர்வாகம்.

*14,மத்தியூஸ் வீதி,*
*தியோகு பாதை,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பேசி.இல.:021-222-3877*

(17147)

## ஆத்மசாந்திக் கிரியை அழைப்பு



அன்புடையீர்,

**26-03-2003 அன்று இறைவனடி சேர்ந்த**

**எமது குடும்பத் தலைவர்**

### அமரர் வைத்திலிங்கம் வல்லிபுரம்

**அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் நாளை (25.04.2003) வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், சபிண்டீகரண மதிய போசனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**- குடும்பத்தினர்.**

**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**

(17149)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### சவிரிமுத்து அருளானந்தம்

**(அருள், இளவாலை)**

**மண்ணில் 14-01-1933** — **விண்ணில் 24-04-2002**

**அன்புடன் எங்களை வளர்த்து**
**பாரினில் எங்களை மாண்புடன்**
**வாழ வைத்த எங்கள் அன்புப் பப்பாவே!**
**இறைவனில் உங்கள் ஆன்மா சாந்தியடைய**
**பாசத்துடன் வேண்டி நிற்கின்றோம்.**


தகவல்:
ம.யேசுதாசன்
ஆசீர்வாதப்பர் றோட், நல்லூர்.

-- குடும்பத்தினர்.

(17145)

## ஈராண்டில் ஈரவிழிகளுடன்

**பிறப்பு 04 - 10 - 1937**



**இறப்பு 16 - 04 - 2001**

### அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்

(ஸ்கூட்டர் பாலா மாஸ்டர்)

விண்ணுலகு நீர் சென்று
ஆண்டிரண்டு ஓடினாலும்
நீங்குமோ உம் நினைவு
எங்கள் அப்பாவே!
நீங்கள் எம்மோடு தான்
வாழ்கிறீர்கள் என்ற
ஒரு நினைவுடன்....

(17138)

M.S. லேன்,
கோண்டாவில்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன், பேரப்பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பரிசாரகர் பயிற்சிநெறி மாணவர்

**திரு.க.சகாதேவன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை**

(நயினாதீவு 4ஆம் வட்டாரம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட வைத்திய அதிகாரி,**
**பரிசாரகர் பயிற்சி நெறி**
**போதனாசிரியர்கள், மாணவர்கள்.**

ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.

(17146)

## கண்ணீர் அஞ்சலி



### செல்வன்
### இராசையா சதீஸ்குமார்

**கடல் கடந்து சென்றாலும் ~**
**உன்னை**
**கண் குளிரப் பார்க்க இருந்தோம்**
**கடைசியில் கடவுள் ~**
**எம்மை**
**கண்ணீர அஞ்சலி செலுத்த**
**வைத்தாரே!**

உன் பிரிவால் துயருறும்:
**மாமாமார், மாமிமார்,**
**சித்திமார், சித்தப்பாமார்**

(17143)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் இராசையா சதீஸ்குமார்

உரும்பிராயை வடக்கைச் சேர்ந்த இராசையா சகுந்தலாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் இராசையா சதீஸ்குமார் அவர்கள் 21-04-2003 திங்கட்கிழமை **London** இல் இறைவனடி எய்திவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (26-04-2003) சனிக்கிழமை **London** இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இராசையா (தகப்பன்)*
*உரும்பிராய்.*

**அப்பா, அம்மா,**
**தங்கை, தம்பி.**

(17143)

## கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற ஊர்காவற்றுறை பிரதேச சபை உத்தியோகத்தர்)

காரைநகர், களபூமி, சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் திக்கரையை வசிப்பிடமாகவும் தற்பொழுது 126/12, அரசடி வீதி, கந்தர்மடத்தில் வசித்துவருமாகிய கணபதிப்பிள்ளை சபாரத்தினம் நேற்று (23-04-2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர் களான கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரபாகரன் (லண்டன்), மனோகரன்(இறுதியாண்டு வணிகத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சாயினா ஆகியோரின் பாசமிகு தந்தை யும் தவமணி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கந்தையா(ஓய்வுபெற்ற குடியேற்ற அதிகாரி, கிளிநொச்சி), தங்கரத்தினம், நல்லையா (ஓய்வு பெற்ற இ.போ.ச.சாரதி), தர்மலிங்கம் பாலசுப்பிரமணியம் (பிரதம எழுதுநர், ஊர்காவற்றுறை பிரதேச சபை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசப்பெருமாள், ஏகாம்பரநாதன் செல்லத்துரை (ஜேர்மனி), காலஞ் சென்ற முருகேசு, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சிவபாக்கியம் பொன்னம்பலம், வடிவாம்பிகை, இராஜேஸ்வரி, ஜெயலட்சுமி ஆகியோ ரின் அன்பு மைத்துனரும் வாலாம்பிகை, தெய்வானை, செல்வநாயகி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.04.2003), வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பகல் 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

126/12, அரசடி வீதி,
இந்துமகளிர் கல்லூரி முன்பாக,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(17140)

## அருணாசலம் இரத்தினசபாபதி

(கார்க்கார சபா)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அருணாசலம் இரத்தினசபாபதி 22-04-2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கமலவதனா, சந்திரவதனா, மலரகிதம் (இந்தியா), குணரகிதம், மதி வண்ணன் (கனடா), யோகவாணி(கனடா), திலகவண்ணன் (கனடா), காலஞ்சென்ற உதயவண்ணன் மற்றும் ஞானவண்ணன்(சுவிஸ்), கமல வண்ணன்(ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தமூர்த்தி (ஓய்வுபெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்), சோதிமயம் (டாக்டர், நிலாவெளி), கனகசபை (இந்தியா), சிவகணேசன், பவிஸ்டாதேவி, ரகுநாதன் (கனடா), கிருஸ்ணவேணி, மாலினி(கனடா), ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சிபிரபீனா (ஜேர்மனி), சித்ராரேவதி, திருமதி ரா.கௌசல்யா, திருமதி உ.அனுஷா, தங்கரூபன், சிவரூபன், திருமதி ந.விஜயலெட்சுமி (லண்டன்), ஜெயராஜ், சுதர்சன் (கனடா), பாரதி, தாரகி, சுதர்சினி, நிரோஜினி, ஜெயராம், ராகவன், யோகநாதன், லக்ஷிகா(கனடா), துவாரகன், ஜெனனி, பிரிந்தாவன் (கனடா), ஐஸ்வர்யா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் திலக்சன், வைஷ்ணவி (ஜேர்மனி) திவ்வியா, சரண்ஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2003) வியாழக்கிழமை மாலை நடைபெற்று, பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ப.சாந்தமூர்த்தி**
(மருமகன்)

காந்தி வீதி,
வல்வெட்டித்துறை.

(17125)

# யாழ். நீதிமன்றத்தில் நேற்று சிங்களத்தில் தாக்கல் செய்த குற்றப்பத்திரங்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.24

கோப்பாய் பொலீஸாரால் சிங்கள மொழி மூலம் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரங்களை யாழ். நீதிவான் நிராகரித்துள்ளார்.

கோப்பாய் பொலீஸாரால் யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட சிங்கள மொழி மூல குற்றப்பத்திரங்களையே நீதிவான் இ.த.விக்னராஜா நிராகரித்தார்.

குற்றப்பத்திரங்கள் அனைத்தும் தமிழில் தயாரிக்கப்படல் வேண்டும் எனத் தெரிவித்த நீதிவான், நிராகரிக்கப்பட்ட குற்றப்பத்திரங்கள் அனைத்தும் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் தமிழில் தாக்கல்செய்யப்பட வேண்டும் என கோப்பாய் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த 11 ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் நீதிவான்களுக்கும், பொலீஸ அதிகாரிகளுக்கும் இடையில் இடம் பெற்ற கூட்டத்தில் தமிழ் மொழியும் அரச கரும மொழியாக நடைமுறையில் உள்ளதால் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் தமிழில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதையும் நீதிவான் விக்னராஜா கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு ஞாபகமூட்டினார். (எ-10)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 10 ஆம் பக்கத்தில் வெளியாகிய - யாழ் 'பல்கலைக்கழக கலைப்பீட பரீட்சைகள் - 2002' என்ற தலைப்பிட்ட - விளம்பரத்தில் -

மீள் பரீட்சைகளில் ஒன்றான நுண்கலை மணி (இசை/நடனம்) - நான்காம் வருடம் என்பது நுண்கலைமாணி (இசை/நடனம்) நான்காம் வருடம் எனத் தவறாக அச்சாகிவிட்டது. அதைத் திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)


## தவறிவிட்டது

ஐயாத்துரை ஜெயசக்தி என்பவருடைய அ.அ. (இல.837073170 V) யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஐயாத்துரை ஜெயசக்தி
பிடாரி கோவிலடி,
ஆனைக்கோட்டை. (சி-27539)

## தவறிவிட்டது

ஏழாலை நாச்சியப் புலத்தைச் சேர்ந்த முத்தர் வடிவேலு என்பவரன் மோட்டார் வாகன இன்சூரன்ஸ், ரக்ஸ் (TAX), புத்தகம் என்பன இணுவில் ஆஸ்பத்திரி, கே.கே.எஸ். வீதி, கிழக்குக் கோண்டாவில் சந்தியில் நேற்றுத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிற்றி பெயின்ற் ஹவுஸ், சுன்னாகம என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (17164)

ராஜா யாழ்ப்பாணம்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30

லக்சுமி இணுவில்
இன்றுமுதல்
ஸ்ரீகாந், பூமிகா,
ரகுவரன், ராதிகா, விவேக் மற்றும் பலர் நடித்த
ரோஜாக் கூட்டம்
தினசரி: 11.00, 2.00, 7.00 (பு.நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், சிம்ரன், சுஜாதா
நடித்த
அவள் வருவாளா
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும் காண்பிக்கப்படும்)
காட்சிகள் தினசரி:
11.00, 2.00, 7.00 (பு.நே.)

நிறைஞ்சனாஸ்
விஜய், சிநேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
JURASSIC PARK - 3

வின்ட்ஸ்டர்
சரத்குமார் கரோல்சோசி தேவயானி
அபிராமி செந்தில் கவுண்டமணி நடித்த
சமஸ்தானம்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
T.P.: 070 212223


# வீடியோ, ஓடியோ, திரையரங்குகளின் உரிமையாளருக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.24

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடியோ, ஓடியோ நிலையங்கள், சிறு திரையரங்குகள் போன்றவற்றின் உரிமையாளர்களுடன் சமகால அரசியல் குறித்து விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

இக்கலந்துரையாடல் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கம் கேட்டுள்ளது. (ஒ)

## கோப்பாய் கோட்ட முன்பள்ளி ஆசிரியருக்கு!

கோப்பாய் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி பாலர் பகல் விடுதி மண்டபத்தில் நடைபெறும். அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-72)

## வெற்றி விழாவுக்காக உணவுச் சாலைகளை அமைக்க வசதி

யாழ்ப்பாணம்,ஏப்.24

ஆனையிறவுச் சமர் மற்றும் தீச்சுவாலை ராணுவ நடவடிக்கை முறியடிப்பு ஆகியவற்றின் வெற்றி விழா நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி பளையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இடம் பெறும் சுற்றாடலில் தற்காலிக உணவுச்சாலைகளை அமைக்க விரும்புவோர் தமக்கருகே உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் கோட்ட அலுவலகங்களில் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பதிவினை மேற்கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (ஒ)

# யுத்தம் வேண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. பேச்சுக்கள் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகளிடையே மாற்றுக்கருத்து இல்லை" என்று மஹிந்த ராஜபக்ஷ சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புலிகள் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாக தெரிவித்திருப்பதை தொடரும் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே கருதவேண்டியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு பேச்சுகள் ஆரம்பித்தபோது ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதே தவிர அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி ஏதுவும் ஆராயப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள குளறுபடியே புலிகள் இப்படியான ஒரு நிலைப்பாட்டுக்கு வருவதற்குக் காரணமாக அமைந்தது.

இந்த சிக்கலான நிலை தொடர்பாக ஆராய உடனடியாக நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும்.

பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன என்று அரசு அறிவித்து வருகையில், புலிகள் இப்படித் தெரிவித்திருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

புலிகளின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக ஐ.தே.க. அரசு என்ன சொல்லப்போகிறது? அவர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? இவை தொடர்பாக இதுவரை எதுவும தெரிவிக்கப்படவில்லை.

நோர்வே அரசு தொடர்ந்தும் மத்தியஸ்த நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் களையப்பட்டு பேச்சுகள் தொடரவேண்டும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

இம்மாநாட்டில் கருத்துத்தெரிவித்த ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச புலிகளுக்கு கடற்பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாட இடமளித்தால் அது இந்துசமுத்திரப் பிராந்தியத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும். இந்தியா இதில் தலையிட வேண்டும் - என்றார்.

இந்த மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் ராஜா கொள்ளுரே, மக்கள் கட்சிச் செயலாளர் சோமசந்திர விஜேசிரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான வீபுத்திரசிகாமணி, ஜோன் செனவிரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# குடத்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

நீண்டகாலமாக கொழும்பிலும் வவுனியாவிலும் வசித்து வந்த செல்லையா புவனேந்திரன் (வயது 50) என்பவரின் சடலமே அது என்று கூறப்படுகிறது. கடந்த சில நாள்களுக்கு முன்பு வவுனியாவிலிருந்து திரும்பிய இவர் துன்னாலையில் தனது தாயாருடன் தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது. இவரது மனைவியும், இரு பிள்ளைகளும் வவுனியாவில் வசிக்கின்றனர்.

நெல்லியடி பொலீஸார் நேற்றுக் காலை சடலத்தை மீட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். பிரேத பரிசோதனைக்காக சடலம் அங்கு வைக்கப்பட்டிருக்கிறது. (ஐ-70-173-117-15)

## கண்ணீர் அஞ்சலி

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தற்போது 9 1/1, இராமகிருஷ்ண அவனியூ, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

### இராமச்சந்திரன் செல்லப்பா
(செல்லையா)

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
உரிமையாளர்.

நயினாதீவு. (சி-27540)

# நினைவுவிட்டகலாத அன்னையையும் தந்தையையும்
## நினைவு கோருகின்றோம்







**சுப்பிரமணியம் பரமசாமி**
மலர்வு - 1901.07.17
உதிர்வு - 1980.03.13

திதி : 24.04.2003
அட்டமி திதி

**பரமசாமி கனகம்மா**
மலர்வு - 1917.02.14
உதிர்வு - 2002.04.03

உங்கள் நினைவுகளால், எங்கள்
காலமெல்லாம் கண்ணீரால் கழுவுகின்றோம்
காலம்தான் உங்களைக் கவர்ந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள் பசுமையானவை
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்
ஐயா, அம்மா என அழைக்க யாருளர்
ஆத்மா சாந்தியடைய இந்நாளில் பிரார்த்திப்போம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நினைவோடு பிரார்த்திப்போம்
திரு.திருமதி கணேஸ்வரன் சாந்தி,
திரு.ஸ்கந்தராஜ் (நோர்வே),
திரு.திருமதி பால்ராஜ் கோமதி.

163/2, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (C-27538)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லையா மகேஸ்வரி

கெருடாவிலைச் சேர்ந்த திருமதி நல்லையா மகேஸ்வரி 21.04.2003 திங்கட்கிழமை கனடா மொன்றியலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் திருமதி வாசுகி (கனடா), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கேதீஸ்வரன் (கனடா), ஞானரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கேசவன் (கனடா), குகதர்ஷினி (கனடா), ஆர்த்தனன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குலவீரசிங்கம், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், இரத்தினசிங்கம், சூரியேஸ்வரி (நோர்வே), இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பற்குனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (26.04.2003) சனிக்கிழமை கனடா மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு. (17165)

தகவல்:
T.தர்சினி (பெறாமகள்)

## திருமதி தோமஸ் விசிறித்தம்மா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தோமஸ் விசிறித்தம்மா நேற்று (23.04.2003) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தோமஸின் அன்பு மனைவியும் ராஜேஸ்வரி (யாழ்.), ஜேம்ஸ் (ஓய்வுபெற்ற இ.மி.ச.ஊழியர்), பிரான்சிஸ்சம்மா (செம்பியன்பற்று), டெய்சி, எஸ்தர் (கிளிநொச்சி), யோண்சன் (இத்தாலி), டரன்சன் (இ.போ.ச. சாரதி, பருத்தித்துறை), றொபின்சன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான வின்சன், கிறேசி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்தித் திருப்பலி இன்று (24.04.2003) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு புனித அடைக்கலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

16/1, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (17166)

தகவல்:
தோ.ஜேம்ஸ் (மகன்)

## சின்னத்துரை விஜயரட்ணம்

*(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)*

பலாலியைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வாழ்விடமாகவும் இணுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விஜயரட்ணம் அவர்கள் நேற்று (23.04.2003) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தவமணியின் பாசமிகு கணவரும் காந்தரூபன் (ஜேர்மனி), மோகன்ராஜ், விஜிதா, அமுதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுகுணா, நந்தினி, பிரதாபன் ஆகியோரின் மாமனாரும் பிரதாஜினி, பிரனுஜா, சுஜானி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.04.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருவாசம்,
கே.கே.எஸ். வீதி, இணுவில். (17167)

தகவல்:
வி.மோகன் (மகன்)

# புலிகள் விதிப்பது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் நியாயப்படுத்தப் போகிறீர்கள்?

☆ ஜனாதிபதி:- உயர் பாதுகாப்பு வலயங்கள் அப்புறப்படுத்தப்படவேண்டும் என்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் எந்தப் பகுதியிலும் அப்படிக் கூறப்படவில்லை. இது விடயத்தில் அன்ரன் பாலசிங்கம் கூறுவதில் உண்மை எதுவுமில்லை.

இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதி[illegible]ச் சேர்ந்தவர்கள். இவ்வாறு இ[illegible]யர்ந்தவர்கள் அனைவரும் [illegible]களில், இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. அரசு அவர்களைக் குடியமர்த்தும்.

ஆனால், விடுதலைப் புலிகளோ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இல்லாத புதுவிடயத்தை இப்போது கொண்டு வருகின்றார்கள்.

இடம்பெயர்ந்தோரைக் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கின்றது. ஆனால், புலிகளோ உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும்வரை பொது மக்களை மீளக்குடியமர அனுமதிக்க மாட்டோம் என்று புதிய நிபந்தனை போடுகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினரை வெளியேற்ற எம்மைப் பலவந்தப்படுத்துகின்றனர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கும்வரை - வன்செயல்களையும் பயங்கரவாதத்தையும் கைவிடுவதாக அறிவிக்கும்வரை - நிரந்தரத் தீர்வு எட்டப்படும்வரை - உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டா. இறைமையுள்ள ஓர் அரசாங்கம் எப்படித் தனது முகாம்களைக் கைவிட முடியும்?

★ கேள்வி:- கடந்த திங்களன்று முப்படைத் தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் அழைத்துக் கலந்துரையாடிய நீங்கள் 1995 ஆம் ஆண்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீண்டும் கொண்டுவரும்படி அவர்களுக்கு உத்தரவிட்டீர்கள். அதன் அர்த்தம் மீண்டும் வீதிச்சோதனைச் சாவடிகள், தடை முகாம்கள், வடக்குக்குச் சென்றுவருவதற்கு பாதுகாப்பு முன் அனுமதி போன்றவை திரும்பவும் கொண்டுவரப்படப் போகின்றன என்பதா?

☆ ஜனாதிபதி:- அப்படியல்ல, வீதிச்சோதனை நிலையங்கள், தடை முகாம்கள் குறித்து நான் எதுவும் கூறவில்லை.

நெருக்கடியைச் சந்திப்பதற்கு அரசு எந்தவகையிலும் தயாராக இருக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குழுவினரும் தேர்தலில் வெற்றியீட்டியதால் அரசை நடத்துவதற்கான அதிக அதிகாரங்களை அவர்களிடம் ஒப்படைப்பதற்குப் போதிய ஜனநாயகப் பண்பு என்னிடம் இருந்தது. அதனால் அவற்றை அவர்களுக்கு வழங்கினேன். என்றாலும் இறுதியில் பதில் கூறும் பொறுப்பு என்னுடையதே.

வெளியில் ஒரு நிகழ்வில் நான் கலந்துகொண்டிருந்த சமயம் சமாதானப் பேச்சுக்களில் இருந்து புலிகள் விலகினர் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது. உடனே திரும்பினேன். தளபதிகளை அழைத்து நிலைமையை ஆராய்ந்தேன்.

ஒவ்வொரு தடவையும் புலிகள் பேச்சை முறித்ததும் போருக்குத் திரும்புவது வழமை. எனவே, ஒரு தாக்குதல் நடக்குமானால் அதை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவேண்டியிருந்தது. அப்படிச் சகல வழியிலும் தயாராக இருப்பதற்கான உத்தரவை நான் விடுத்தேன். தடை முகாம்கள், சோதனைச்சாவடிகள் குறித்து நான் எதுவும் குறிப்பிடவில்லை.

பாதுகாப்புத் தொடர்பாக நான் செய்த பல ஏற்பாடுகள் இந்த ஐ.தே.க. அரசில் இப்போது இல்லாமல் போய்விட்டன.

உதாரணத்துக்கு தாக்குதல் ஒன்று நடக்குமானால் 'சிவப்பு எச்சரிக்கை' முறை ஒன்றை நான் அறிமுகப்படுத்தியிருந்தேன். அதன்படி மூன்று நிமிடத்துக்குள் பொலீஸாரும், படையினரும் அங்கு விரைவர். அந்த முறை 2000ஆம் ஆண்டு டிசெம்பர் வரை செயற்படுத்தப்பட்டு வந்தது. இப்போது அது இல்லாமல் போய்விட்டது.

இப்போது சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அதுபற்றிய அறிவு ஏதும் இல்லை. எனவே, அத்தகைய பணிப்புரைகளை இப்போது நான் விடுக்க வேண்டியிருந்தது; விடுத்தேன்.

சந்தர்ப்பவசமாக கொழும்பு தாக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டுமல்லவா? (ஐ)


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களினதும் பிரத்தியேக வகுப்புகளினதும் நிர்வாகிகளுக்கும் சகல ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை (25.04.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர் திரு. வே.பாலகுமாரன் அவர்கள் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலை மற்றும் உங்கள் சந்தேகங்கள், வினாக்கள் போன்றவற்றுக்கு விளக்கமளிக்கவுள்ளார். தவறாது அனைத்து நிர்வாகிகளும், ஆசிரியர்களும் தங்கள் வகுப்புகளை நிறுத்தி இக் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(17163) - த.க.நி.ஒன்றியம்.



LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்

பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ். நகருக்கும் யாழ். நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-222 6026 HOTLINE: 0777-382343

021-222 6035 072-401423

(C/27281)


# பொ.ஐ.மு. - ஜே.வி.பி. ஒப்பந்தத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி எதுவுமில்லை

## கருத்தரங்கில் சம்பந்தன் எம்.பி.கவலை

கொழும்பு,ஏப்.24

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் செய்துகொள்ளவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிகிறது. இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அக்கட்சிகள் கரிசனை காட்டாதது கவலைக்குரியதாகும்.

திருமலை மாவட்டக் கூட்டணி எம.பி.ஆர்.சம்பந்தன் நேற்று டிரானஸ் ஏசியா ஹோட்டலில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு ஒழுங்கு செய்திருந்த 'இனப்பிரச்சினைத் தீர்வில் சிறுபான்மையினரின் உரிமைகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சிங்களமும், தமிழும் அரசகரும மொழிகளாக இருக்கின்றன. ஆனால், அச்சட்டம் சரியான முறையில் அமுலாக்கப்படவில்லை. அரசியலமைப்பு விவகார அமைச்சராக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், முன்னைய அரசில் பதவி வகித்த காலத்தில், மொழி அமுலாக்கம் தொடர்பாக விசும்பாயவில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அதில் நானும் கலந்துகொண்டேன். கருத்தரங்கில் எடுக்கப்பட்ட முடிவுகள் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு சட்டவடிவம் கொடுக்கப்படுமென அப்பொழுது தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை அச்சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவில்லை.

இந்தியாவில் பிராந்தியங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. பிராந்தியங்களுக்குச் சுயாட்சி வழங்குவதால் நாடு துண்டாடப்படமாட்டாது.

தேசிய இனப்பிரச்சினைக்குப் பேச்சுமூலமே தீர்வு காணமுடியும். எனவே, விட்டுக்கொடுப்புகளுடன் பேசசைத் தொடரவேண்டும் - இவ்வாறு அவர் கூறினார். (எ)

## அஸ்கிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்து திருப்தியடைய முடியும் எனவும், தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வர் எனத் தான் நம்புவதாகவும் அஸ்கிரிய மகா நாயக்கர் மேலும் தெரிவித்திருக்கிறார். (எ)

## மினிபஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அணிந்த நபர்கள் எனக் கூறப்படுவோர் இவரை வெட்டியதுடன் இவரது வானையும் அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பியுள்ளனர்.

இரத்தம் பாய்ந்த நிலையில் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட இவர் அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டவேளை இடை வழியில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. சம்பவ நேரத்தில் இவருடன் கூட இருந்த இவரது உதவியாளரான பூதன் சந்திரகுமார் (வயது 27) என்பவர் சிறு காயங்களுடன் தப்பிவிட்டார்.

கொலை செய்யப்பட்ட அற்புதராஜா சாவகச்சேரியில் மதுபான நிலையம் ஒன்றை நடத்தி வந்தவர் என்றும் -

அந்த மதுபான நிலையம் அண்மையில் இனந்தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஐ-4)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களில் நடைபெறுகின்ற மாநாடுகள் அனைத்துக்கும் விடுதலைப் புலிகள் அழைக்கப்படுவர் என்று பிரதமர் தன்னிடம் கூறினார் என்று அமைச்சர் பின்னர் கூறியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்களை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பகிர்ந்து கொள்வதே தனது வன்னி விஜயத்தின் நோக்கம் என்றும் சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனும் கிளிநொச்சி செல்கிறார். (ஐ-4)

## எரிகாயத்துக்கு உள்ளான குடும்பஸ்தர் உயிரிழந்தார்!

எரிகாயங்களுக்கு உள்ளான குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இணுவில் மேற்கைச் சேர்ந்த எஸ்.விஜயரட்ணம் (வயது 58) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (எ-10-5-15)

## சமயசந்நிதி

நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய மஹோற்சவம் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 10 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில், எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும், அடுத்த மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (எ-6)

## பளைப் பகுதித் தம்பதியர் காஸ்குக்கர் வெடித்து பிரான்ஸில் உயிரிழப்பு!

பளைப் பகுதியைச் சேர்ந்த கணவனும் மனைவியும் பிரான்ஸில் உள்ள வீட்டில் காஸ்குக்கர் வெடித்து பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பளை முல்லையடியைச் சேர்ந்த சின்னக்குட்டி இராஜேந்திரம் (வயது 58) இவரது மனைவியான இராஜேந்திரம் பாக்கியலட்சுமி (வயது 53) ஆகியோரே இவ்வாறு பலியானவர்களாவர்.

கடந்த 16ஆம் திகதி சமையலில் ஈடுபட்ட வேளையில் காஸ் குக்கர் வெடித்ததில் இவர்கள் எரிந்து பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)


உடன் தேவை

விமாகி செரமிக் ஸ்தாபனத்தில் பல் கிளாக், விற்பனையாளர் உடன் தேவை. தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு :-

விமாகி

27/3, மின்சார நிலைய விதி, யாழ்ப்பாணம்.

T.P. :- 0777 798181

(27541)

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2005

பிரிவு II

பொருளியல்

S.வரதராஜன்

ஆரம்பம் : 26.04.2003

சனி 12.00 (ப.நே.)

(17135)

தாவடியில்... வல்வெட்டியில்...

!இணைய சேவைப் பூங்கா!

இரவு பகல்

24 மணி நேர சேவை

ISP COMMUNICATION

எமது நிறுவனத்தின் முதலாவது ஆண்டு நிறைவு நாளான இன்று (24.04.2003) எமது நிறுவனத்தின் உயர்விற்காய் உழைத்த/ ஆதரவளித்த/ அரும்பாடுபட்ட எமது சகோதரர்கள்/ நண்பர்கள்/ பணியாளர்கள்/ வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் ISP யின் முதலாம் ஆண்டின் நிறைவையும் புதிய ஆண்டின் வரவையும் சிறப்பிக்கும் முகமாக ISP வாடிக்கையாளர்களுக்கான சேவைக் கட்டணத்தில் மேலும் பல மாற்றங்களைக் கொண்டுவர இருக்கின்றோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

முழு விவரத்திற்கு எதிர்வரும் 01.05.2003 உதயனுக்காக காத்திருங்கள்.

T.P-021 226 3327 (17109) - நிர்வாகத்தினர்.

INTERNATIONAL IT COMPANY HAS THE FOLLOWING VACANCIES IN JAFFNA

MANAGER

Should have an IT background and good marketing skills. Excellent communication skills in Tamil and English is essential. One to Two years experience in managing a small business unit will be advantageous.

STUDENT COUNSELLOR

A female with a pleasing personality and very good communication skills in Tamil and English is required for this post. Ability to work in a computerized enviornment and skills in MS Word and MS Excel is essential.

ACCOUNTS EXECUTIVE

A part qualification in Accountancy and the skills in Book Keeping is essential for this post. Computer skills in MS Word and MS Excel is essential. Atleast 1 year experience in an Accounts related job would be advantageous.

C/O. Uthayan,
P.o.Box No. 1861

MCS

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.(பரமேஸ்வராச் சந்திக்கருகே, மேல்மாடியில்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

DIP. IN MEDIA TECHNOLOGY

Cool 3D Photoshop Flash Premiere

யாழ்ப்பாணத்தில் புதிய அறிமுகம்

DIP. IN WEB & MULTIMEDIA

3DS Max Character Studio Affter Effects Swift 3D

Mobile@net Computer Services


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.